# கவர்னர் ஜெனரல் இன்று பாரதம் செல்கிறார்

Riegstered as a News paper in Ceylon விலைசதம் 15

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

National Tamil Daily

மலர் 11
இதழ்: 82
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் சித்திரை 22 ஸபர் 16 ஞாயிற்றுக்கிழமை [4-5-69]

போன்: 7199
பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்
... கோர்ப்பரேஷன்

கோட்டை, ஞாயிறு காலஞ்சென்ற இந்திய ஜனாதிபதியின் இறுதிச்சடங்குகளில் கலந்து கொள்ள மகா தேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவ இன்று இந்தியா பயணமாகிறார்.

நாளை நடைபெறவிருக்கும் ஜனாதிபதியின் இறுதிச் சடங்கில் கலநது கொள்வதற்கு முன் நேற்றுமாலை ஏழுமணி தொடக்கம் பொதுமக்களின் பார்வைக்காக ராஷ்டிரபதி பவனில் வைக்கப்பட்டுள்ள ஜனாதிபதியின் பூத உடலுக்கு ராஷ்டிர பவன் செல்லும் மகாதேசாதிபதி அஞ்சலி செலுத்துவார்.

## மகாராணி அதானுபம்

லண்டன், ஏப். 3 டாக்டர் சாகிர் ஹுசேனின் மறைவு குறித்து பிரிட்டிஷ் மகாராணி, பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சன், பாகிஸ்தான் ஜனாதிபதி யயாகான், போப் போல், ஜப்பான் பிரதமர் திரு. சுகார்ட்டோ, மலேஷியா பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மான், சிங்கப்பூர் பிரதமர் திரு. லீகுவான் லீ ஆகியோர் தமது அனுதாபச் செய்தியை அனுப்பிவைத்துள்ளனர்.

# பாரத ஜனாதிபதி சாகிர் ஹுசேன் மாரடைப்பால் திடீர்மரணம்



## மேதின ஊர்வல சம்பவங்கள்

## பண்டாரநாயக்கா கேள்விக்கு பிரதமர் டட்லி பதில்

கொழும்பு, சனி மே 1-ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சீனச் சார்பு கம்யூனிஸ்டு கட்சியின் மேதின ஊர்வலத்தில் பொலிஸார் மேற்கொண்ட தாக்குதல் பற்றி இன்று கூடிய ஆட்சிமன்றத்தில் கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா கேள்விகேட்டார்.

பொலிஸ் தாக்குதல் பற்றி கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா ஊர்வலத்தினர் மிளகாய்த்தூள், கற்கள் போன்றவற்றைக் கொண்டு சென்றதனாலேயே பொலிஸார் தாக்குதல் நடத்தவேண்டிய நிலைஏற்பட்டதென விளக்கினர்.

ஊர்வலத்திற்கு தலைமை தாங்கிச் சென்ற திரு. கே. ஏ சுப்பிரமணியத்தை 24 மணி நேரத்திற்கு மேலாக பொலிஸ் நிலையத்தில் வைத்திருந்தமைபற்றி கம்பஹா எம். பி. கேட்டபோது அப்படி எதுவும் நடக்கவில்லையென பிரதமர் பதிலளித்தார்.

ஆயினும், இதுபற்றி விசாரணை நடாத்தப்படுமென்றும் பிரதமர் உறுதி கூறினர்.

பொலிஸார் மிகவும் குறைந்த அளவு அதிகாரத்தையே ஊர்வலத்தினர் மீது பிரயோகித்துள்ளனர் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

## தலைவர்கள் துயரம்

திரு. சாகிர் ஹுசேனின் மறைவு குறித்து நாட்டின் பலதலைவர்களும் அனுதாபச் செய்தி அனுப்பியுள்ளனர்.

தமிழகமுதலமைச்சர் திரு. மு. கருணாநிதி:- 'நாட்டின் இன்றைய சூழ்நிலையில் திரு. சாகிர் ஹுசேனின் மறைவு

## இடைக்கால அதிபராக திரு. வி. வி. கிரி நியமனம்

### 13 நாட்களுக்கு தேசிய துக்கதினம் அறிவிப்பு

புதுடில்லி, மே 4

**பாரத ஜனாதிபதி டாக்டர் சாகிர் ஹுசேன் நேற்று காலை 11-20 மணிக்கு அமரரானர். கடும் மாரடைப்பின் காரணமாக அவர் காலமானர்.**

இன்று முற்பகலில் டாக்டர் சாகிர் ஹுசேன் திடீரென நோயுற்றர். உடனே டாக்டர்கள் அழைக்கப்பட்டனர். ஆனல் உடல்நிலை மேலும் மோசமாகி சிறிது நேரத்து[illegible]கல்லாம் அவரது ஆவி பிரிந்தது.

டாக்டர் சாகிர் ஹுசேன் காலமான செய்தி கிடைத்தவுடன் ராஷ்டிரபதி [illegible] பிரமுகர்களும் ராஜீய தூதர்களும் விரைந்துகொண்டிருந்தார்கள்.

இன்று காலையில் ... உபராஷ்டிரபதி திரு. வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜ்ய சபைக்கு தெரிவு

இலக்கியத்துறையிலும் விஞ்ஞானத்துறையிலும் டாக்டர் சாகிர்ஹுசேன் ...தைகளுக்காக ஏராளமான நூல்களைத் தமது பெயரில் எழுதியுள்ளார். பின்பட்

# தலைவர்கள் துயரம்

திரு. சாகிர் ஹுசேனின் மறைவு குறித்து நாட்டின் பல தலைவர்களும் அனுதாபச் செய்தி அனுப்பியுள்ளனர்.

தற்காலிக ஜனதிபதி திரு. பி. பி. கிரி:- ''பாரத ஜனதிபதி திரு. சாகிர் ஹுசேனின் பிரிவு மிகுந்த அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. காந்திய வழியில் வாழ்ந்த ஓர் அரசியல் வாதியை நாடு இழந்துவிட்டது''

முன்னுள் ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன்: 'நாட்டின் மிகப்பெருந்தன்மையானவரையும், சிறந்தகல்விமானையும் நாம் இழந்துவிட்டோம்-'

துணைப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய்; 'இந்து-முஸ்லிம் ஒற்றுமையின் சின்னமாகவிளங்கிய ஒரு பெருந்தலைவரை இன்று இந்தியா இழந்துவிட்டது.'

சுதந்திரா கட்சி தலைவர் திரு, ராஜாஜி:-'திரு.ஹுசேனைவிட மதிப்புமிக்க ஒருவர் இந்தியாவில் இல்லை'

அமைச்சர் திரு. சுவர்ண் சிங்:- 'நாட்டின் முன்னேற்றம், சுதந்திரம், ஐக்கியம் யாவற்றுக்கும் நாடு நம்பியிருந்த ஒருவரை இழந்து விட்டோம்.'

தமிழகமுதலமைச்சர் திரு. மு. கருணநிதி:- 'நாட்டின் இன்றைய சூழ்நிலையில் திரு. சாகிர் ஹுசேனின் மறைவு உண்மையில் ஒரு பேரிழப்பாகும். இந்து முஸ்லிம் ஒற்றுமையின் சின்னமும், நாட்டின் கலாச்சாரத்தினதும் அறிவித்திறனதும் முத்திரையும் நம்மைவிட்டு மறைந்துவிட்டது.'

தி. மு. க. அமைப்பாளர் திரு. என். வி. நடராஜன்:- 'அரசியல் விஷயங்களில் கருத்து வேற்றுமைப்பட்டிருந்தாலும் நாட்டின் சகல பிரிவினரிடத்திலும் மதிப்புப்பெற்றிருந்த ஒரு தலைவர் இவர்.'

இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா:- 'நமது ஜனதிபதி மறைந்துவிட்டார். அவரது இடம் இன்றுநிரப்பமுடியாதசூன்யமாக தெரிகிறது'

இந்திய கம்யூனிஸ்டு தலைவர் திரு. ராமமூர்த்தி, திரு. உஜ்ஜார்சிங், இந்திய சோஷலிஸ்டு கட்சித்தலைவர் ஆகியோரும் அனுதாபச் செய்திகள் அனுப்பிவைத்துள்ளனர்.

## அருகே நின்ற சிறுமிகளை டிராக்டர் மண் மூடியது

சுழிபுரம், சனி

டிராக்டரிலிருந்து மண் திடீரென கொட்டப்பட்டதால் அருகில் நின்ற இரு சிறுமிகள் மண்ணுக்கடியில் அகப்பட்டுக்கொண்டனர். டிராக்டர் மண்பறிப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டுநின்ற சிறுமிகளே இவ்வாறுவிபத்துக்குள்ளானவர்கள் இச்சம்பவம் நேற்று சங்கானை பொலிஸ் பகுதியில் நடைபெற்றது.

திருவடிநிலை - மாதகல் வீதியை விஸ்தரிப்பதற்காக டிராக்டர் ஒன்று மண்பறிக்கையிலேயே இச்சம்பவம் ஏற்பட்டதாம். இச்சிறுமிகளை மீட்க உதவிக்குச்சென்ற நபரும் கையெலும்பு முறிய வேண்டிய நிலைக்குள்ளானர்.

விபத்துக்குள்ளான இரு சிறுமிகளும் தற்போது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்துபற்றி சங்கானைப் பொலிசார் விசாரணை நடாத்தி வருகின்றனர்.

கள்ளக்கடத்தலுக்கு ராணுவ ஜீப் பாதுகாப்பு

## விசாரணைசெய்ய விசேஷகுழு நியமனம்

கொழும்பு சனி

வல்வெட்டித்துறையில் இராணுவ சிப்பாய்கள்சிலர் கள்ளக்கடத்தலுக்கு உதவி அளித்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டை விசாரணை செய்வதற்காகஉயர்ராணுவ அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பலாலி இராணுவ முகாமிலுள்ள இராணுவ சிப்பாய்கள் சிலர் கள்ளக்கடத்தலில் ஈடுபட்ட லொறியொன்றுக்கு பாதுகாப்பளித்து உதவி புரிந்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்ததைத்தொடர்ந்து இந்த விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது. இதுசம்பந்தமாக இரண்டு ராணுவ சார்ஜண்டுகளையும், ஒரு ராணுவ ஜீப் சாரதியையும் வல்வெட்டித்துறைப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

ராணுவ உயர் அதிகாரிகள் குழுவின் விசாரணை முடிவடைந்ததும் பலாலி ராணுவ முகாமிலுள்ள ராணுவ சிப்பாய்கள் அனைவரும் வடபகுதிக்கு அப்பால் மாற்றஞ்செய்யப்படுவர் எனத்தெரிகிறது.

பிரதமர் உறுதி [illegible]றினர்.

பொலிஸார் மிகவும் குறைந்த அளவு அதிகாரத்தையே ஊர்வலத்தினர் மீது பிரயோகித்துள்ளனர் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, ஞாயிறு

நேற்று இழுக்கப்பட்ட 244-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாம் பரிசு

20 L 0574 ரூபா 100,000

இரண்டாம்பரிசு

06 B 0857 ரூபா 40,000

மூன்ருவது பரிசு

24 H 0538 ரூபா 10,000

தலா ரூபா 849-40 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 34 A 0656 | 05 S 0509 |
| 33 M 0598 | 17 E 0384 |
| 44 L 0583 | 43 S 0928 |
| 45 O 0866 | 03 A 0570 |
| 27 [illegible] 0504 | 41 M 0277 |
| 38 T 0544 | 34 B 0008 |
| [illegible]8 E 0798 | 06 C 0414 |
| 05 D 0965 | 15 H 0976 |
| 38 C 0100 | 41 J 0092 |
| 06 M 0832 | 03 U 0171 |
| 37 M 0310 | 02 V 0280 |
| 20 V 0255 | 11 M 0118 |
| 28 E 0124 | 29 G 0753 |
| 38 F 0053 | 06 T 0256 |
| 12 A 0179 | 16 T 0406 |
| 47 Y 0353 | 45 O 0868 |
| 41 A 0343 | 22 E 0687 |
| 12 M 0324 | 23 W 0433 |
| 02 D 0758 | 07 R 0748 |
| 12 H 0495 | 40 C 0655 |
| 26 L 0874 | 04 S 0917 |
| 29 Q 0900 | 23 P 0492 |
| 31 K 0126 | 46 A 089 |
| 44 M 0873 | 04 Q 0151 |
| 19 H 0055 | 35 A 0530 |
| 44 K 0002 | 31 H 0569 |
| 23 K 0917 | 45 X 0706 |
| 37 R 0235 | 30 S 0070 |
| 37 T 0723 | 08 Q 0850 |
| 41 W 0675 | 20 Y 0956 |
| 20 L 0291 | 32 Z 0744 |
| 30 X 0771 | 36 O 0142 |
| 29 V 0786 | 32 O 0513 |
| 21 K 0905 | 23 G 0632 |
| 04 R 0693 | 21 V 0250 |
| 36 Y 0914 | 31 B 0739 |
| 34 U 0417 | 33 B 0200 |
| 22 V 0853 | 18 G 0389 |
| 14 D 0178 | 22 K 0651 |
| 12 L 0975 | 14 T 0234 |
| 20 M 0816 | 04 F 0752 |
| 46 X 0089 | 11 U 0676 |
| 06 O 0443 | 12 P 0467 |
| 41 Q 0525 | 27 V 0792 |
| 20 N 0867 | 30 B 0865 |
| 01 R 0691 | 15 O 0678 |
| 19 K 0601 | 40 G 0058 |
| 27 Z 0625 | 39 V 0913 |
| 22 Y 0619 | 07 Q 0511 |
| 13 L 0951 | 05 D 0540 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்)

மேலும் மோசமாகி சிறிது நேரத்து[illegible]கெல்லாம் அவரது ஆவி பிரிந்தது.

டாக்டர் சாகிர் ஹுசேன் காலமான செய்தி கிடைத்தவுடன் ராஷ்டிரபதி பவனுக்கு எம். பிக்களும் பிரமுகர்களும் ராஜீய தூதர்களும் விரைந்துகொண்டிருந்தார்கள்.

இன்று காலையில் போபாலுக்கு போயிருந்த உபராஷ்டிரபதி திரு. வி. வி. கிரி ஜனதிபதியின் மரணச்செய்தி கேட்டுஉடனே புதுடில்லிக்கு திரும்பினுர்.

ராஜஸ்தான் சென்றிருந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியும் உடனே புதுடில்லிக்குப் புறப்பட்டுவந்தார்.

## தேசாய் தலைமையில் மந்திரிகள் கூடினர்

பிரதமர் தலைநகரில் இல்லாதிருந்ததால் துணைப்பிரதம மந்திரி திரு.மொரார்ஜி தேசாய் தலைமையில் மந்திரிகள் அவசரமாகக் கூடினுர்கள்.

ஜனதிபதி காலமானதின் காரணமாக நேற்றிலிருந்து 13 நாட்களுக்கு தேசிய துக்க தினம் அனுஷ்டிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டது. தேசியக்கொடி அரசாங்கக் கட்டிடங்களில் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படவேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

## தலை நகர் சோகமயம்

ஜனதிபதியின் மறைவு தலைநகரில் பரவியதுடன் எங்கும் ஒரே சோகமாகக் காட்சி அளித்தது. மக்கள் கூட்டம் கூட்டமாக ராஷ்டிரபதிபவனை நோக்கிப் போகத் தொடங்கினுர்கள்.

## கிரி தற்காலிக ஜனதிபதி

ஜனதிபதி சாகிர்ஹுசேன் காலமானதால் நேற்று பிற்பகல் உபஜனதிபதி திரு. வி. வி. கிரி தற்காலிகஜனதிபதியாகப் பதவிப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டார். அடுத்து முறைப்படி ஜனதிபதி தெரிவு நடைபெறும்வரையில் திரு. கிரி இடைக்கால ஜனதிபதியாக இருப்பார்.

### வாழ்க்கைக் குறிப்பு

டாக்டர் சாகிர் ஹுசேன் 1897-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8-ம்திகதி பிறந்தார். தமது வீட்டிலேயே ஆரம்ப கல்வியைப்பெற்ருர். அவருக்கு 9 வயதாய் இருக்கும் போது தந்தைமறைந்தார். 1967-ம் ஆண்டில் அவருடைய குடும்பம் உத்தர பிரதேசத்தில் குடியேறியது.


### டாக்டராக ஆசை

சிறுவயதிலேயே அவருக்கு தாம் ஒரு டாக்டராக வரவேண்டும் என்று ஆசை உண்டாயிற்று ஆனுல் அவரால் மருத்துவத்துறையில் டாக்டராக வரமுடியவில்லை. என்ருலும் இலக்கியத்தில் அவர் ஒரு டாக்டரானுர்.

சிறுவயதிலேயே இந்தியாவில் காந்திஜி ஆரம்பித்த ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டார். இதனுல் காந்திஜீக்கும் அவருக்கும் நெருங்கிய உறவு ஏற்பட்டது.

### துணைவேந்தர்

1920-ம் ஆண்டு ஜமியா மலியா இஸ்லாமிய பல்கலைக்கழகத்தை ஸ்தாபிக்க காந்திஜியின் ஆதரவை வேண்டினுர். 29-வது வயதிலேயே அதன் துணைவேந்தராகவும் பதவி ஏற்ருர். 22ஆண்டுகள் அதன் துணைவேந்தராக இருந்து நாட்டில் சிறந்ததொரு பல்கலைக்கழககமா அதனை வளர்த்தார். பின்னர் அலிகார் சென்று அங்குள்ள அலிகார் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரானுர்.



## ராஜ்ய சபைக்கு தெரிவு

இலக்கியத்துறையிலும் விஞ்ஞானத்துறையிலும் டாக்டர் சாகிர்ஹுசேன் ஆற்றிய அளப்பரிய சேவைகளின் காரணமாக 1952-ம் ஆண்டில் ராஜ்யசபைக்கு ஒரு அங்கத்தவராகத்தெரிவி செய்யப்பட்டார். 1956-ம் ஆண்டில் மீண்டும் அங்கத்தவராக ராஜ்யசபைக்கு நியமிக்கப்பட்டபர்.

### ஜனதிபதியானுர்

1957-ம் ஆண்டில் பிகார் மாநிலததின் கவர்னராக டாக்டர்சாகிர்ஹுசேன் நியமிக்கப்பட்டார். 1962-ம் ஆண்டுவரையில் அந்தப்பதவியிலிருந்தார். அதே ஆண்டில் பாரதத்தின் உபஜனதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். 1967-ம் ஆண்டு பாரதத்தின் மிக உயர்ந்த பதவியான ஜனதிபதி பதவிக்கு டாக்டர் சாகிர் ஹுசேன்தெரிவுசெய்யப்பட்டார். 5ஆண்டுகள் ராஜ்ய சபையில் தலைவராகவிருந்து நேர்மைக்கும்ஒருதலைப்பட்சமற்ற கொள்கைக்கும் பேர் பெற்ருர்.

### கல்விமான்

டாக்டர் சாகிர் ஹுசேன் சிறந்த கல்விமான். எண்ணம், செயல், மனிதாபிமானம் பகுத்தறிவு போன்றவற்றின் பண்பாட்டுக்குன்ருக அவர் விளங்கினுர் அவர் எப்பொழுதுமே படித்துக்கொண்டிருப்பார்.குழந்தைகளுக்காக ஏராளமான நூல்களைத் தமது புனைபெயரில் எழுதியுள்ளார். பிளாட்டோவின் சிந்தனை பற்றிய அவரது நூல் பிரக்கியாதி பெற்றது.

### பத்மபூஷண்

கல்வித்துறையிலும் கலாச்சாரத்துறையிலும் அவர் ஆற்றிய சேவைகளுக்காக 1954ம் ஆண்டில் பத்மபூஷண் விருது அவருக்கு வழங்கப்பட்டது. 1963ம் ஆண்டில் பாரதத்தின் மிக உயர்ந்த கௌரவ விருதான பாரதரத்தினம் விருது அவருக்கு வழங்கப்பட்டது.

### எளிமையானவர்

டாக்டர் சாகிர் ஹுசேன் மிக எளிமையாக வாழ்ந்தார். சாந்தமாகவும் கண்ணியமாகவும் அவர் பழகுவார். இயற்கையை அவர் வெகுவாக நேசித்தார். ரோஜாமலர்கள் பற்றிய விஷயங்களில் அவர் ஒரு நிபுணர் என்றுகூட சொல்வதுண்டு. ......

## அமெரிக்க உதவி

பருத்தித்துறை. சனி

நெல்லியடி மத்தியமகா வித்தியாலய ஆசிரியர் திரு. கே. எஸ். குகதாசன் நீரியல், உயிரியல்ஆராய்ச்சிசெய்வதற்கான வசதிகளை ஆசியா பவுண்டேசன் ஸ்தாபனம் அளித்துள்ளது. சுமார் ஓராண்டு காலம் இவ்வாராய்ச்சியில் அமெரிக்காவுக்குச்செல்லும் திரு.குகதாசன் ஏற்கனவே உயிரியல் பற்றியசிறந்த நூல்களை உருவாககியுள்ளார். இவர் கரவெட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பிதம்பதிகளின் ஏகபுதல்வனுவர்.

டாக்டர் பந்துலு கொலை:

# மற்ற டாக்ஸி எங்கே? கைதான நால்வர் ரிமாண்டில்

## நாடெங்கும் பொலிஸ் வலைவிரிப்பு

கோட்டை, சனி

டாக்டர் பந்துல பெரேரா கொலை சம்பந்தமாக நேற்று முன்தினம் நால்வர் கைது செய்யப்பட்டனர். கொலை நடப்பதற்கு உபயோகிக்கப்பட்டதாகக் கருதப்படும் டாக்ஸி ஒன்றையும் பொலிசார் கைது செய்தனர். இது சம்பந்தமாக மேலும் ஒரு டாக்ஸியையும் இன்னும் சிலரையும் பொலிசார் தேடி வருகின்றனர்.

பந்தலு பெரேரா கொலை செய்யப்பட்டபோது அவர் ஓட்டிவந்த காரில் உள்ள கைவிரல் அடையாளங்களும், சந்தேக நபர்களின் கைவிரல் அடையாளங்களும் வைத்திருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் இதுபற்றிய தகவல்களை கொடுக்க விரும்புபவர்களை உடனடியாக பொலிசாருடன் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸ்இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபய குணவர்த்தன கேட்டுக்கொண்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சுப்பிரமணியம், தங்கவேலு, ஆண்டி அன்ரனி ஆகிய நால்வரும் விரைவில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவர் இதுசம்பந்தமான தகவல்கள் பலவற்றை மேலும் சேகரிக்கக் கூடிய வாய்ப்புகள் இருப்பதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

கடந்த 24ம் திகதி கொழும்பு விக்டோரியா பூங்காவனத்திற்கு அருகே வைத்து காதலியுடன் சென்றுகொண்டிருந்த 23 வயது நிரம்பிய டாக்டர் பந்துலு பெரேரா கொலை செய்யப்பட்டது தெரிந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

நெசவு செய்வதில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. நேரில் தொடர்புகொள்ளவும். கருணை நெசவு நிலையம், ''கண்ணகிரி'', இடந்தரை ஒழுங்கை, காங்கேசன்துறை. 974

மாடு:
நேரம் ஐந்து போத்தல் அல்லது கூடக் கறக்கக் கூடிய பசு. முதல், இரண்டு அல்லது மூன்றும் ஈற்றாக இருக்கவேண்டும். ந. கா. நல்லதம்பி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 991

### விற்பனைக்கு

தோட்டக்காணி:
ஆவரங்கால் சந்தியில் (வல்லை வீதிக்கும் அச்சுவேலி வீதிக்கும் இடையில்) 15 பரப்புத் தோட்டக் காணி விற்பனைக்குண்டு. வீதிக்கரையில் வீடு கட்டவும் வாய்ப்பானது. விபரங்கட்கு சி. மயிலானந்தன், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 1010

### கல்வி

பெண் பட்டதாரிகளால் சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்கியல், வர்த்தகம் கற்பிக்கப்படும் மகளிர்கல்லூரி. தாமதமின்றி சேருங்கள். யூனைட்டெட் மகளிர் கல்லூரி, 107, பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 989

ராஜா (யாழ்ப்பாணம்) 111வது தினம்
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா நடித்த
**ஒளிவிளக்கு**
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்குஅரைக்கட்டணம்

மானிப்பாய்
**வெஸ்லி சினிமா**
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி - சௌகார்ஜானகி நடித்த
**பார் மகளே பார்**


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 4—5—69

செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-10 உள்ளூர்ச் செய்திகள் 7-30 படப்பாட்டு, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள். 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 படப்பாட்டு, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன் 61 மீ.

மாலை 4-30 செய்திச்சுருக்கம், 4-35 சங்கமம், 5-00 செய்திச் சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக் 5-15 மாணவர்நிகழ்ச்சி, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-10 பேச்சு, 6-15 வீணையும் புல்லாங்குழலிசையும், 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்நாடகசங்கீதம், 7-35 வாத்தியஇசை, 7-45 நாடகம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்தியஇசை, 9-30 கலந்துரையாடல், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

—— ——

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு
இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலையின் வருடாந்த விளையாட்டுவிழா எதிர்வரும் 7-ந் திகதி உடுவில் கல்வி அதிகாரி திரு. ச. இராசா தலைமையில் நடைபெறவிருக்கின்றது. உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் இவ்விழாவுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

உதைபந்தாட்டம்

# றெக்ளமேசன் கோஷ்டி இறுதி ஆட்டத்துக்கு தெரிவு

யாழ்ப்பாணம், ஞாயிறு
விளையாட்டமைச்சின் ஆதரவின்கீழ் யாழ். மாவட்டத்திலுள்ள சனசமூக நிலையங்களிடையே நடாத்தப்பட்டு வந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரை இறுதியாட்டம் நேற்றுமுன் தினம் றெக்கிளமேசன் சனசமூக நிலையக் கோஷ்டிக்கும் நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூகநிலையக் கோஷ்டிக்குமிடையில் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றது. இவ்விரு கோஷ்டிகளுக்குமிடையில் மூன்றுவது முறையாக இப்போட்டி நடைபெற்றது.

போட்டி ஆரம்பமாகியதும் இரு கோஷ்டியினரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் விளையாடினர் இடைவேளைக்கு முன் றெக்கிளமேசன் கோஷ்டியினர் கோல்கள் போடும் பல சந்தர்ப்பங்களை நழுவ விட்டு விட்டனர். இடைவேளையின் போது இரு கோஷ்டியினரும் கோல்கள் எதுவும் போடவில்லை.

இடைவேளையின்பின் ஆட்டம் மிகவும் வேகமாக இரு கோஷ்டியினருக்குமிடையில் நடைபெற்றது. ஆட்டம் முடிவதற்கு 3 நிமிடங்கள் இருக்கும் போது றெக்கிளமேசன் கோஷ்டியின் இடதுகரை வீரர் தேவராசா மிகசாதுரியமாக ஒரு கோலைப் போட்டார். ஆட்டம் முடிவடையும்போது றெக்கிளமேச கோஷ்டி 1 0 கோலால் சென். மேரிஸ் கோஷ்டியைத் தோற்கடித்து இறுதி ஆட்டத்துக்கு தெரிவுசெய்யப்பட்டது.

இப்போட்டிக்கு திரு. கிருஷ்ணன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

### இறுதியாட்டம்

இச் சுற்றுப் போட்டியில் 'பி' பிரிவில் இறுதியாட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட கோஷ்டிகளான நாவாந்துறை சென். நீக்கிலஸ் சனசமூக நிலையமும், கந்தர்மடம் சனசமூகநிலையமும் 'ஏ' பிரிவில் தெரிவு செய்யப்பட்ட கோஷ்டிகளான றெக்கிளமேசன் சனசமூக நிலையமும்குருநகர்சன சமூகநிலையமும் இம்மாதம் 7-ம்திகதி சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இறுதிப்போட்டியில் கலந்து கொள்ளவிருக்கின்றன. (தே. நி)

## இன்றைய பலன்

4-5-69
சௌமிய வருடம்
சித்திரை மீ 22-ம் உ
ஞாயிற்றுக்கிழமை

திதி- துதியை காலை 6-57 மேல் திருதியை.

நட்சத்திரம்- அனுஷம் பகல் 11-19 மேல் கேட்டை.

ராகுகாலம்- 4-26 5-56.

சுபநேரம் 8-56—10-26.

இன்று பிறந்தவர்களுக்கு - மந்தநிலையே காணப்படுகின்றன. சிலர் வாதரோகத்தினால் துன்பப்படலாம். உணவு விசயத்தில் அதிக சுகாதாரம் வேண்டும். எதிர்பாராத செலவுகளின் காரணமாகச் சிலர் கஷ்டப்படவும் நேரிடலாம். குடும்பத்தில் சிறு பூசல்கள்


ராணி
[யாழ்ப்பாணம்]
[தினசரி 3காட்சிகள்]
ஜெய்சங்கர்
விஜயகுமாரி நடித்த
**ஜீவனாம்சம்**


## இசைத்தமிழ்மன்ற உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு
யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் நான்காவது பொதுக் கூட்டம் நல்லூர்மங்கையர்க்கரசிவித்தியாசாலை மண்டபத்தில் சங்கீத பூஷணம் திரு. தா. இராஜசிங்கம்தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் மன்ற உறுப்பினர்களாக தெரிவுசெய்யப் பெற்றனர். சங்கீத பூஷணம் திரு. ஆ. நமசிவாயம் தலைவர் உப தலைவர்கள் திருவாளர்கள் ஏ. எஸ். ராமநாதன், கே. வி. எஸ். சண்முகநாதன் க. செல்வரத்தினம், க. சிவராமலிங்கம், பே. சந்திரசேகரம் இணைக்காரியதரிசிகள்: திருவாளர்கள்: அ. நமசிவாயம், ச. பாலசிங்கம், தனாதிகாரி: திரு. தா. மயில்வாகனம். மேலும் நிர்வாக சபை உறுப்பினர்களாகப் பதினொருவர் தெரிவுசெய்யப்பெற்றுள்ளனர்.

சினிமா விமர்சனம்

# பூவும் பொட்டும்

'காசி'

ஏற்கனவே ஒரு விவாகஞ் செய்து கண்தெரியாத மனைவியின் வயிற்றில் ஒரு குழந்தையுடன் அவளை விட்டு விட்டுச்செல்லும் ஒரு பேராசிரியர் மீண்டும் போலி நாகரிகத்திலும் பொய்க் கௌரவத்திலும் மூழ்கி சதா டான்ஸ், கிளப் முதலியவற்றையே நாடித்திரியும் ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்கிறார். அவர் மறுமணம் செய்தாலும் அடக்கமும், பொறுமையும் உருவான பண்புள்ளவர் தான். பேராசிரியருக்கு நாளடைவில் தனது மனைவியின் போக்கு அவரது வாழ்க்கையில் கசப்பை ஏற்படுத்தி விட்டது. பேராசிரியருக்குப், குடும்பப் பண்பாடே இல்லாத, போலி வாழ்க்கையை விரும்பித் திரியும் அவரதுமனைவிக்கும் சுகுமார் என்ற மகனும், சித்ரா என்ற மகளும் பிறந்தனர் வளர்ந்து பெரியவர்களாயினர்.

இரு துருவங்களாக, குடும்பம் என்று சொல்ல முடியாத அளவுக்கு வேறுபட்ட பண்பாடுகளுடன் வாழ்க்கை நடத்தி வரும் தனது தாயின் டாம்பீகப் போக்கையும், தாய் தனது சொந்த மகளுக்கே தனது போலி வாழ்க்கை பழக்க வழக்கங்களை பழக்கி வரும் அநாகரிகப் போக்கையும் அவர்களது மகன் சுகுமார் கண்டு கொண்டு சும்மா இருக்க முடியவில்லை. தனது தந்தையின் அமைதியான குணத்திற்கும், தாயினதும் சகோதரியினதும் குடும்பத்திற்கு ஒவ்வாத பண்பாட்டிற்கும் உள்ள வேறுபாட்டைக் கண்டு அவர்களது மகன் சுகுமார் வெட்கமும் வேதனையும் அடைகிறான். தனது குடும்பம் இவ்வளவு தூரம் சீர்குலைந்து, பண்பாடு இழந்து-ஊர்சிரிக்கத் தக்கதாக இருப்பதைக் கண்டு ஆறாத் துயரத்தில் மூழ்கி அதை மறப்பதற்காக குடிப்பழக்கத்தை பழகுகிறான் வீடு செல்லும் வேளைகளில் எல்லாம் அறிவிழந்த நிலையில் மதுவருந்திச் செல்கிறான். அவன் பிறந்து இத்தனை பெரியவனாகி வரும்வரை அவனது தாய், தந்தையின் அன்பையும் அணைப்பையும் கண்டதே கிடையாது என்றால் அவர்கள் குடும்பம் இருந்த நிலையை

அவனைத் துரத்திவிடுகிறான் பிரகாஷ்.

இவ்வாறாகக் கதையைத் திறம்பட எழுதியுள்ளார் கதாசிரியர். டாக்டர் நிகார் ரஞ்சன்ருப்தா எழுதியுள்ள இக்கதையை, தாதாமிராசி டைரக்ட் செய்துள்ளார். நடிகர்கள் எல்லோருமே மிகத்திறமையாக நடித்துள்ளனர். குடும்பத்துடன் பார்த்து மகிழலாம்.

இப்படம் இப்பொழுது யாழ். வெலிங்டன் திரையில் ஓடிக்கொண்டிருக்கிறது.

## செய்திச் சுருக்கம்

### சுயேச்சைகளுக்கு பெருவெற்றி

காலி மாவட்டத்திலுள்ள கலகம்பாய கிராமசபைத் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிட்டவர்கள் அதிகமான வட்டாரங்களில் வெற்றி பெற்றார்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 2 அபேட்சகரும் தோல்வியுற்றனர். ஐக்கிய தேசியக் கட்சி எந்த வட்டாரத்திலும் போட்டியிடவில்லை.

0 0 0

### இவர்களுக்கு அதிர்ஷ்டம்

விவசாயக் கல்லூரிகளில் பயிற்சி பெற்று வெளியேறும் வாலிபர்களுக்கு விவசாயம் செய்யக் காணி வழங்க காணி நீர்ப்பாசன அமைச்சு முடிவு செய்துள்ளது இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வாலிபருக்கும் எட்டு அல்லது பத்து ஏக்கர் காணி வழங்கப்படும்.

0 0 0

### சரக்கு இறக்குமதியில் சுறுசுறுப்பு

கடந்த பல வாரங்களிலும் பார்க்கச் சென்ற வாரம் கொழும்புத்துறைமுகத்தில் கூடுதலான சரக்குகள் இறக்குமதி செய்யப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. சென்ற வாரம் மட்டும் 59,688 தொன் சரக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

0 0

# மரணத்தின்காரணம் பிரேதசோதனையில் தெரிந்தது

யாழ்ப்பாணம், ஞாயிறு
மரத்தால் விழுந்ததெனத் தெரிவிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட வாலிபர் ஒருவர் அனுமதிக்கப்பட்ட சிலமணி நேரத்தில் மரணமானார். ஆனால் அவரது மரணம் தற்கொலை என்று பிரேத பரிசோதனையின் பின்னர் தீர்ப்பளிக்கப்பட்டது.

கொக்குவில் பகுதியைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் என்பவரே இவ்வாறு மரணமானவராவர்.

மரண விசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் இது சம்பந்தமாக மரண விசாரணை நடாத்தினார். மரணமானவர் மரத்தால் வீழ்ந்ததால் அறிவிழந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாக மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவரைப் பரிசோதனைசெய்த டாக்டர் இறந்தவரது வயிற்றுக்குள் மண்ணெண்ணை இருந்ததாகத் தெரிவித்தார்.

இறுதியில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (கா. நி)

# 51,000 சியவச டிக்கட்டுகள் திருப்பி அனுப்பப்பட்டன

## வடபகுதியில் விற்பனவு குறைவாம

யாழ்ப்பாணம், ஞாயிறு
'சியவச' சுவீப் டிக்கட் விற்பனையில் வடபகுதி ஆசிரியர்கள் இம்முறை கூடிய கவனம்செலுத்தாது கைவிரித்து விட்டார்களாம் கல்வி அமைச்சு எதிர்பார்த்ததை விட சுமார் 5,000 டிக்கட்டுகள் குறைவாகவே விற்பனை செய்யப்பட்டுள்ளது

கல்விநூற்றாண்டுவிழாவை முன்னிட்டு கல்வி அமைச்சினால் நடாத்தப்படும் 'சியவஸ' சுவீப்பின் இரண்டாவது சீட்டிழுப்பு நாளை மாலை நடைபெறவிருக்கின்றது.

வடபகுதிக்கு அனுப்பப்பட்ட டிக்கட்டுகளில் 198,000 டிக்கட்டுகள் மட்டுமே விற்கப்பட்டு மிகுதியான 51,000 டிக்கட்டுகள் நேற்று திருப்பி அனுப்பப்பட்டன.

முதலாவது 'சியவஸ' டிக்கட்டுகள் வடக்கில் மட்டும் 2,47,000 விற்கப்பட்டன. மிகுதியாக 3000 டிக்கட்டுகள் மட்டுமே விற்காமல் கடந்த முறை திருப்பி அனுப்பப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (கா. நி)

### நெல்கொள்வனவு அதிகரிப்பு

உத்தரவாதவிலைத்திட்டத்தின்கீழ் அரசாங்கம் ஏப்ரல் மாதம்21ந்திகதிவரைசுமார் 62 லட்சம் புசல் நெல்லைக் கொள்வனவு செய்துள்ளதாக கமத்தொழில்சேவைப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

0 0 0

### பஸ்மோதி குழந்தை மரணம்

இ. போ. ச. பஸ்ஸினால்

## கல்லால் எறிந்து காயப்படுத்தினாராம்

வல்வெட்டித்துறை, சனி
தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவிலில் இரவு நித்திரை செய்து கொண்டிருந்த ஒரு பெண்ணின் சங்கிலியை களவாட முற்பட்ட சமயம் பெண்ணின் கணவர் திருடன் ஒருவனை துரத்திச் சென்றாராம். துரத்திச் சென்றவரை திருடன் கற்களால் எறிந்து காயப்படுத்திவிட்டு ஓடி மறைந்துவிட்டாராம். இது சம்பந்தமாக காயமடைந்தவர் வல்வெட்டித்துறை பொலிசாருக்கு புகார்செய்ததைத் தொடர்ந்து பொலிசார் சந்தேகநபரைத் தேடினார்கள். அந்நபர் வேறும் பல இடங்களிலும் களவில் ஈடுபட்டு பருத்தித்துறைப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைத்திருப்பது வல்வெட்டித்துறைப் பொலிசாருக்கு விசாரணையின்போது தெரியவந்தது. இதுசம்பந்தமாக பொலிசார் மேலும் இருவரை தேடிவருகின்றனர். காயமடைந்தவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஏற்பினால் மரணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவனம்சம்

## வின்ஸர் யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்

★ சிவாஜிகணேசன் ★ ஜெயலலிதா

ஏ. வி. எம். ராஜன், ஜோதிலக்ஷ்மி

சோ, நாகேஷ்

நடித்த

ராம்குமார் பிக்சர்ஸ்

## கலாட்டா கல்யாணம்



## இப்பொழுது திரையிடப்படுகிறது!
## யாழ் வெலிங்டன் திரையில்

தினசரி பி. ப. 2-30, மாலை 6-00 இரவு 9-30 மணிக்கு

போயா முன்தினம் போயா தினம்,

விடுமுறை நாட்களில் காலை 10-00 மணிக்கு



பத்மஸ்ரீ — குணசித்திர நடிகர்

பானுமதி — எஸ் வி. ரங்கராவ்

ஏ. வி. எம். ராஜன் — பண்டரிபாய்

முத்துராமன் — பாரதி — நாகேஷ்

நடிக்கும்

வாசு பிலிம்ஸ் அளிக்கும்

## பூவும் பொட்டும்

டைரக்ஷன்

தாதாமிராசி



கடைசி வாரம்

இங்ஸ்லி — பிளாஸா — ஸ்ரீ கிருஷ்ணு

(கொழும்பு) — (வெள்ளவத்தை) — (திருமலை)

எம். ஜி. ஆர். — ஜெயலலிதா

நடித்த

## சந்திரோதயம்


பப்படலாம். உணவு விசயத்தில் அதிக சுகாதாரம் வேண்டும். எதிர்பாராத செலவுகளின் காரணமாகச் சிலர் கஷ்டப்படவும் நேரிடலாம். குடும்பத்தில் சிறு பூசல்கள் தலைதூக்கினுலும் மன அடக்கம் அவசியம்வேண்டும்.

---

மேஷம்- பிரிவுத் துயர் பிரயாண நினைப்பு.

ரிஷிபம்- இதயங்கள் சங்கமம், இடைவெளி குறுகும்.

மிதுனம்- பகைவர் தடுப்பர் பார்த்து நட.

கடகம்- இலக்கிய ரசனை, இசையிலும் பிரியம்.

சிம்மம்- தொழில்நலன் தொடர்புகள் பெருகும்.

கன்னி- புதுவழி பிறக்கும், புகழும் பரவும்.

துலாம்- மறதியால் அவதி, மனப்போர்.

விருச்சிகம்- நம்பிக் கெடுதல், ஏக்கம் தாக்கும்.

தனுசு- அறுசுவை உண்டி, ஆனந்த வாழ்வு.

மகரம்- இல்லறச் சோர்வு இனப்பகை.

கும்பம்- மனையில் மகிழ்ச்சி, மக்கள் நலன்.

மீனம்- பாசவலை, பரோபகார மிகுதி.

சோதிடக் கலாநிதி

திருமலை வேலுப்பிள்ளை


இணுவில்

## ஸ்ரீ காலிங்கன்

தினசரி: 6-30, 9-30 மணி

பிரிபோயா, போயா 2-30மணி

ஜெமினி - விஜயகுமாரி

நடித்த

## பெண் என்றால் பெண்



## REGAL at JAFFNA

Daily 4-45, 7 &9-45 p.m.

Poya, Pre-Poya 10-30 A.M.

## WORLD by NIGHT No. 3

( Cinemascope - Color )



## MANOHARA JAFFNA

Daily 4-45, 7& 9-45 P.M.

Poya, Pre-Poya 10-30a. m.

## THE SAVAGE EYE


நமசிவாயம், ச. பாலசிங்கம், தணிகாரி: திரு. தா. மயில்வாகனம். மேலும் நிர்வாக சபை உறுப்பினர்களாகப் பதினுறு அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பெற்றுள்ளனர்.

## பழையமாணவர் சங்கம்

உடுப்பிட்டி, சனி

வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்க 8வது ஆண்டுவிழா அண்மையில் நடைபெற்றது. விழாவில் வடமாநில விஞ்ஞான வித்தியாதிகாரி திரு. எம். அற்புதநாதன் டாக்டர் கதிர்காமத்தம்பி உட்பட வேறு சிலரும் உரையாற்றினர்.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- திரு. எம். எஸ். சினித்தம்பி (கல்லூரி அதிபர்). உபதலைவர்கள்- திரு. எஸ். கணேசன், திருவாளர்கள் வெஸ்லி கணபதிப்பிள்ளை, வீ. ராஜேஸ்வரன், இணைச்செயலாளர்கள்- திருவாளர்கள் ஜே. எஸ். கிறிஸ்ததாஸ், கே. நவரத்தினம். பொருளாளர்- திரு. எஸ். சிவகுரு. கணக்குப்பரிசோதகர்- திரு. த. செல்வராசா.

ஐவரடங்கிய செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## இன்று இலவச சிகிச்சை

யாழ்ப்பாணம், ஞாயிறு

பிரபல கண்வைத்தியரான டாக்டர் எஸ். ஆனந்தராஜா எம். பி. பி. எஸ், டி. ஓ. (லண்டன்), எப். ஆர் சி. எஸ் (இங்கிலாந்து இன்று மாலை 2 மணியிலிருந்து 6 மணி வரை வலிகாமம் மேற்குடல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இலவச கண்சிகிச்சை அளிக்கின்றார்.

## உள்ளூராட்சி மன்ற தலைவர்கள் மகாநாடு

மட்டக்களப்பு, சனி

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றத் தலைவர்களின் மகாநாடு இம்மாதம் 12-ந் திகதி மட்டக்களப்பு நகரமண்டபத்தில் நடைபெறவுள்ளது. உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. பி. ஏ. ஜி. காசிநாதரால் கூட்டப்படவிருக்கும் இந்த மகாநாடு இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

அவன் பிறந்து இத்தனை பெரியவனுகி வரும்வரை அவனது தாய், தந்தையரின் அன்பையும் அணைப்பையும் கண்டதே கிடையாது என்றால் அவர்களின் குடும்பம் இருந்த நிலையைச் சொல்லவும் வேண்டுமா?

தந்தையாக எஸ் வி. ரங்கராவ்வும், தாயாக பானுமதியும், மகன் சுகுமாராக நாகேஷும், மகள் சித்ராவாக ஜோதிலட்சுமியும் நடிக்கின்றனர்

தனது தாயின் போலி வாழ்க்கையை பின்பற்றி வாழ்ந்துவந்த சித்ராவும், கிளப், பார்ட்டி, டான்ஸ் முதலியவற்றுக்குப் போகாமல் இல்லை. இவற்றுக்குச் சென்று வரும் சித்ரா, பெண்களுடனேயே தனது ஓய்வு நேரத்தைக் கழிக்கும் ஒருவனுடன் சிநேகிதம் வைக்கிறாள். அவனின் அரவணைப் இரவு பகலாகத் திரிகிறாள். தனது பெற்றோரின் காரில் தாம் விரும்பிய நேரங்களில் எல்லாம் தனது காதலன் மோகனை (முத்துராமன்) சந்திக்கிறாள். இறுதியில் தனது காதலனால் கைவிடப்படுகிறாள்.

இதை அறிந்ததும் சித்ரா எவ்வளவுதான் கெட்டவளாக இருந்தாலும் அவளது சகோதரன் சுகுமாருக்கு (நாகேஷ்) பார்த்துக் கொண்டு இருக்க முடியுமா? ஒரே இரத்தம் ஓடிக்கொண்டிருக்கும் உயிரல்லவா அது? தனது தங்கை காதலனால் கைவிடப் பட்டாள் என்று தனது தங்கை மூலம் கேள்விப்பட்டதும், காதலன் மோகன் வீட்டுக்கு ஓடோடிச் செல்கிறான். மோகனின் கன்னத்தில் ஆவேசத்துடன் அறைகிறான்.

தனது தகப்பனையே தெரியாமல் வாழ்ந்துவரும் முதல் மனைவியின் மகன் பிரகாஷுக்கு (ஏ.வி எம். ராஜன்) தனது ஆசிரியரான பேராசிரியர் ராஜரத்தினம் (ரங்கராவ்தான் தனது தந்தையென்று தெரியாமல் அவருடன் நடந்துகொள்கிறான். ஒரு தடவை தனது தந்தைதான் பேராசிரியர் ராஜரத்தினம் என்று அவர் மூலமே அறிந்ததும், அவரை வெளியே போகும்படி துரத்துகிறான். கண் தெரியாத பிரகாஷின் தாய், தனது கணவரின் குரல் கேட்டு ஓடோடி வருகிறார் தனது கணவரின் காலில் விழுந்து கடைசியாகும்பிட்டு விடுவதற்காகத் துடியாய்த் துடிக்கிறார். இருபத்தைந்து வருடகாலமாக தன்னையும், தனது தாயையும்விட்டுப்பிரிந்து, வேறொருத்தியுடன் குடும்பம் நடத்தும் தனது தந்தையுடன் பேசுவதற்கு விரும்பாமல்

குகள் இறக்குமதி செய்யப் பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. சென்ற வாரம் மட்டும் 59,688 தொன் சரக்கு இறக்குமதி செய்யப் பட்டுள்ளது.

0 0

## தேனீவளர்ப்பில் புதிய உற்சாகம்

கல்விநூற்றாண்டுவிழாவை முன்னிட்டு நடைபெறும் தேனீ வளர்ப்புப் போட்டியில் அதிக கவனம் செலுத்தும்படி மூதூர்ப்பகுதி கல்வி அதிகாரி திரு. எம். இப்ராகீம் தனது பகுதி பாடசாலைகளுக்கு சுற்றறிக்கை ஒன்று அனுப்பிவைத்துள்ளார்.

0 0 0

## விளிக் வருகிறார்

சோவியத்ஸ்தானிகராலய கலாச்சார அதிகாரி திரு. விளிக் இம்மாதம் 7ம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றார்.

தாக கமத்தொழில்சேவைப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

0 0 0

## பஸ்மோதி குழந்தை மரணம்

இ. போ. ச. பஸ்ஸினால் மோதுண்ட மூன்றுவயதுக் குழந்தைஒன்று ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானது. இச்சம்பவம் இரத்தினபுரி மாவட்டத்தில்நடைபெற்றது.

0 0 0

## தாலி திருட்டு

வயலில் வேலைசெய்துவிட்டுக் கணவனுடன் வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் மனைவி ஒருவரின் தாலி வழியில் கொள்ளையடித்துச் செல்லப்பட்ட சம்பவம் ஒன்று இங்கு நடைபெற்றுள்ளதாக மட்டக்களப்புப் பொலிசில் புகார் செய்யப்பட்டது.

## ஏற்பினால் மரணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நாற்பது நாட்களுக்கு முன் காலில் புண் ஏற்பட்டதால் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட கொழும்பு கூட்டுத்தாபன ஊழியரான வைத்திலிங்கம் மகாலிங்கம் என்பவர் நேற்று மரணமானார். மரணவிசாரணை அதிகாரி ஏற்புவலியால் மரணம் ஏற்பட்டதென்று தீர்ப்பளித்தார். (கா. நி)


வியாபாரம் பெருக

விளம்பரம் செய்க



நாற்பது ஆண்டுகளில் உயர்ந்தது. — மக்களின் மனங்கவர்

# "மில்க்வைற் தயாரிப்பு"

உறைகளும் பொன்—அவை அழி பொருளல்ல

இன்றே திரட்டுக! நாட்டுக பெரும் பொருள்!!

★ மில்க்வைற் நீல சோப் ★ மில்க்வைற் பார் சோப்

★ மில்க்வைற் மெடிகேட்டட் சோப் ★ மில்க்வைற் சலவைப்பவுடர்

## மேலுறைகளுக்கு விசேஷ பொருள்கள்!

**மில்க்வைற் நீலசோப்:**

சிக்கனமான சலவைக்கும், சிறந்த உழைப்புக்கும் மதிப்புள்ள தயாரிப்பு.

(1) 50 மில்க்வைற் நீல சோப் உறைகளுக்கு:-

ஒரு பொலித்தீன் பேக் அல்லது
ஒரு பலவர்ணப் படம் அல்லது சாக்குப் பை.

(2) மில்க்வைற் நீலசோப் உறைகள் 100-க்கு :-

ஒரு கூப்பன் பாதுகாப்புப் பிளாஸ்டிக் கவர்.

(3) 300-க்கு மேற்பட்ட உறைகளுக்கு:- அழகிய துவாய் 1

**மில்க்வைற் பார் சோப்:**

நைலோன், ரெறிலின் துணிகளின் தூய சலவைக்கும் -- அலுமினியப் பாத்திர வகைகளை சுத்தம் செய்வதற்கும் விசேஷ இரசாயனப் பொருள்கள் சேர்க்கப்பட்டுள்ளன,

10 மில்க்வைற் பார் சோப் உறைகளுக்கு:- ஒரு கூப்பன் பாதுகாப்புப் பிளாஸ்டிக் கவர்.

**மில்க்வைற் மெடிகேட்டட் சோப்:**

சகலவித சரும வியாதிகளுக்கும் மக்கள் தினமும் பாவிக்கும் வாசனை சோப்

10 மில்க்வைற் மெடிகேட்டட் சோப் உறைகளுக்கு:-

ஒரு கூப்பன் பாதுகாப்புப் பிளாஸ்டிக் கவர்.

**மில்க்வைற் சலவைப் பவுடர்:**

பொங்கிவரும் நுரைவளம் துணிகளின் அழுக்கை மின் வேகத்தில் அகற்றித் தூய வெண்மை அளிப்பது

10 மில்க்வைற் சலவைப் பவுடர் உறைகளுக்கு:-

ஒரு கீப்பேர்ஸ் (திறப்புக் கோர்ப்பது)

மேற்காட்டியவாறு மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளை மில்க்வைற் வியாபார வான்களில் அல்லது மில்க்வைற் தொழிற்சாலை காரியாலயத்தில் 31-5-1969 வரை கொடுத்து இலவசப் பொருள்களை பெற்றுக்கொள்ளலாம்.

தந்தி: ''மில்க்வைற்'' — தொலைபேசி: 7233

## மில்க்வைற் சோப் தொழிற்சாலை

527, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

கிளை: மில்க்வைற் டிப்போ, 53, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு—13.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. நா. பார்வையாளர்களுக்கு விசேஷ பாதுகாப்பு தேவை

## பந்தோபஸ்து சபைக்கு யுதாண்ட் அறிக்கை

வாஷிங்டன், மே 3

**மேற்காசியாவில் இருக்கும் ஐ. நா. பார்வையாளர்களுக்கு விசேஷ பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து கொடுக்கவேண்டுமென்று ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் பாதுகாப்புச் சபைக்கு அறிவித்திருக்கிறார்.**



மேற்காசிய நிலைமை குறித்து யுதாண்ட் பாதுகாப்புச் சபைக்குச் சமர்ப்பித்துள்ள ஓர் அறிக்கையிலேயே இந்த யோசனையை வற்புறுத்தியிருக்கின்றார்.

சூயஸ் கால்வாயின் குறுக்கே அடிக்கடி குண்டுகள் பரிமாறப்படுவதால் ஐ. நா. பார்வையாளர்கள் ஆபத்துக்குள்ளாக நேரிடும் என்றும், இவர்களுக்கு விசேஷ பாதுகாப்பு வசதிகள் ஏற்படுத்தாவிட்டால் அவர்களுக்கு அபாயம் நேரிடலாம் என்றும் யுதாண்ட் வலியுறுத்தியுள்ளார்.

கால்வாயின் இரு பகுதிகளிலுமுள்ள ஐ. நா பார்வையாளர்கள் முகாம்களைச் சுற்றிப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென்று குறிப்பிட்டுள்ள அவர் அவசர நிலைமைகளில் அவர்கள் தப்பிச் செல்லக் கூடியதாக ஹெலிகொப்டர் வசதியும், படகு வசதிகளும் செய்துகொடுக்கப்படவேண்டும் என்றும் வற்புறுத்தியுள்ளார்.

## அரபு 'கொமாண்டோ' நடவடிக்கைகள்

நேற்றுத் தொடர்ந்து அரபுப் படைகளுக்கும், இஸ்ரேலியர்களுக்கும் இடையில் பல முனைகளில் சண்டை நடைபெற்றது. சிரியா-இஸ்ரேல் எல்லையில் கடுமையான சண்டை இடம்பெற்றது. சிரியாவில் இஸ்ரேலியர் கைப்பற்றி வைத்திருக்கும் கோலான் பிரதேசத்தில் ஒரு நகரை அரபுக் 'கொமாண்டோ' படையினர் சுமார் மூன்று மணி நேரம் கைப்பற்றித் தம் அப்பகுதியிலிருந்த இஸ்ரேலியரின் இராணுவத் தளங்களை அழித்துவிட்டதாகவும் துப்பாக்கிகள் மற்றும் இராணுவ சாதனங்களையும் நொறுக்கித்தள்ளியதாகவும் அவர் தெரிவித்தார். தமது தரப்பில் இரு 'கொமாண்டோ'க்கள் கொல்லப்பட்டதாக அவர்கள் அறிவித்தனர்.

இரு முனைகளில் நடந்த சண்டையில் நான்கு 'கொமாண்டோ'க்களைக்

திருமலையிலுள்ள

## மிதக்கும் துறையை பம்பாய்க் கம்பனி செப்பனிட்டுத்தரும்

புதுடில்லி, மே 3

இலங்கை திருக்கோணமலைத் துறைமுகத்தில் பிரிட்டிஷ் ஆட்சியின்போது பாவனையிலிருந்த மிதக்கும் துறையை பம்பாய்க்கம்பனியொன்று செப்பனிட்டுக் கொடுக்க முன்வந்துள்ளது.

இத்துறை பழுதடைந்து கடலுள் ஆழ்ந்துபோய்இருக்கிறது. இதனை பம்பாய்க்கு நான்கு பெரிய படகுகள் இழுத்துச்செல்லும். அங்கு அது சிறப்பான முறையில் செப்பனிடப்பட்டு மீண்டும் திருக்கோணமலைக்குக் கொண்டுபோகப்படும். இந்த வேலைக்கு சுமார் 15 மாதங்கள் பிடிக்குமாம்.

## வில்சனுக்கு அமைச்சர்கள் பலர் ஆதரவு

லண்டன், மே 3

பிரிட்டிஷ் பிரதமரப் பதவியிலிருந்து வெளியேற்றுவதற்கு அவருடைய கட்சிக்குள்ளேயே கிளர்ச்சியொன்று வலுப்பெற்றுவருவதாகக் கூறப்பட்டபோதிலும் பல அமைச்சர்கள் அவருடைய நடவடிக்கைகளை ஆதரித்துப் பேசிவருகிறார்கள். தொழிற்சங்க நடவடிக்கைகள் சம்பந்தமாக திரு வில்சன் கொண்டுவர இருக்கும் மசோதாவைத்

## தொழிலாளர் சமத்துவம் பேணிக்காக்க வழி

### உப சபாநாயகர் கூறுகிறார்

அளவெட்டி, சனி

''தொழிலாளர் விஷயங்களில் அரசியல் தலையீடு இருப்பதுதான் அவர்கள்பிரச்னை தீராதுஇருக்கக் காரணம். சென்ற வேலைநிறுத்தம் தோல்வியில் முடிந்ததற்கும் அரசியல்தலையீடே காரணம் ஆகவே தொழிலாளர்கள் தமது பிரச்னைகளைத் தீர்க்கும் விஷயத்தில் அரசியலைப் புகுத்தக்கூடாது.''

இவ்வாறு வலி மேற்குக் கூட்டுறவுப் பணியாளர் இயக்குநர் குழுவின் ஆதரவில் சங்கானை அரசடி வயிரவர் கோவில் முன்றலில் நடந்த மேதின விழாவில் உரையாற்றிய யாழ். உதவி மேயர் திரு. ஆ. துரைராசசிங்கம் கூறினார்.

உதவிமேயர் தொடர்ந்து பேசியதாவது

இலங்கையில் தொழிலாளித்துவத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் இடையில் மீண்டும் பிரச்னை இருந்து வருகின்றது. யூ. என். பி. அரசும் தொழிலாளர்களுக்கு மதிப்பளிக்காமல் முதலாளிகளுக்கே மதிப்புக் கொடுப்பது கவலைக்குரியதாகும்.

எஸ். டள்யூ ஆர். டி. பண்டாரநாயகாவின் ஆட்சியின் போது வெசாக்கும், மே தினமும் மே முதலாந் திகதி வந்தபோது அவ் ஆட்சி இரண்டும் ஒரு தினத்தில் நிகழ அனுமதித்தது. ஆனல் இப்போதுள்ள அரசு மே முதலாந் திகதி தொழிலாளர் தினத்தைக் கொண்டாட உத்தரவு வழங்காதது தொழிலாளரை நசுக்கும் செயல்.

உபசபாநாயகர் திரு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது- கூட்டுறவு முறையில்தான் மேல் நாடுகளில் அரசியல் பிரச்னைகளும் தொழிலாளர் பிரச்னைகளும் தீர்க்கப்படுகின்றன. எமது நாட்டில் இம்முறையைக் கையாளாததுதான் பிரச்னைகள்நிறைந்துள்ளதற்குக்காரணம். கூட்டுறவு முறையில் சாதிக்கமுடியாத செயல் ஒன்றுமேயில்லை.''

மற்றும் அகில இலங்கை உப்பு உத்தியோகத்தர் சங்கத் தலைவர் திரு. கா. இராசேந்திரம். உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

வட்டுக்கோட்டை கலைவாணி நாடகமன்றமளித்த நாடகமும், வி. ஏ. பாலகிருஷ்ணனின் நாகசுரக் கச்சேரியும் இடம்பெற்றது.

## இடமாற்றக் குழப்பத்தால் ஆசிரியர் பட்டபாடு

உடுப்பிட்டி, சனி

இடமாற்றம் பெற்ற ஒரு மாதகாலத்துள் தன் மனைவி பிள்ளைகளுடன் இருந்த வீட்டையும் காலிசெய்துவிட்டு கரணவாய் வந்து சேர்ந்த ஆசிரியருக்கு ஒரு மாதத்தின் பின்னர் இடமாற்றப் ரத்துசெய்யப்பட்டுள்ளதா அறிவிக்கப்பட்டுள்ளதாம்.


பிற்றபெத்தர, குலர் தாவை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கடமையாற்றிய திரு. சு. மகாதேவன் கரணவாய் விநாயகர் வித்தியாசாலைக்குக் கடந்த தவணை விடுதலை முன்னர் இடமாற்றம் பெற்றிருந்தார். ஆனல் இவருக்கு இப்போது இடமாற்றம் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 17 வருடங்களாக [illegible] தாம் [illegible] கடமையாற்றியுள்ள தாகவும்இடமாற்றம்பெற்ற

## இளைஞன் தற்கொலை

### தந்தை கடிந்தாராம்

அளவெட்டி, சனி

தந்தைகண்டித்ததால்மன [illegible]



## பாங்கொக்கிலிருந்து திரும்பினர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கை உதைபந்தாட்டக் கோஷ்டியில் தெரிவுசெய்யப்பட்டு பாங்கொக் சென்ற யாழ்ப்பாணம் பாஷையூரைச் சேர்ந்த எம். பிரான்சிஸ் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளார்.

யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரி மாணவரான இவர் அண்மையில் நடைபெற்ற அகில இலங்கை உதைபந்தாட்டக் கோஷ்டியிலும் தெரிவுசெய்யப்பட்டு இந்தியா சென்று திரும்பியவராவார். பாஷையூர் புனித அந்தோனியார் சனசமூக நிலைய இளைஞர் கழக உபதலைவரான இவர் மேற்படி கழக விளையாட்டுச் சங்கத்தின் முகிய உறுப்பினருமாவார்.

'பாங்கொக்' கிலிருந்து இவர் திரும்பியதைப் பாராட்டும்முகமாக வரவேற்பு உபசாரம் ஒன்று நிலையத் தலைவர் திரு ஜே. எஸ். அழகையா தலைமையில் பாஷையூரில் நடைபெறவிருக்கின்றது. (கா. நி)

## லண்டன் சென்றார்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

செல்வன் த. பத்மலிங்கம் பொறியியல் துறையில் விசேஷ பயிற்சி பெறுவதற்காக சென்றவாரம் விமானம் மூலம் லண்டன் பயணமானார். இவருடன் இவரது சகோதரரான செல்வன் த. நடேசலிங்கமும் உயர் கல்வி பெறச் சென்றுள்ளார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர்களான இவர்கள் யாழ்ப்பாணம் கொட்டடி தருமலிங்கம் தம்பதிகளின் புத்திரராவர்

## வீரருக்குப் பாராட்டு

பருத்தித்துறை, சனி

பாஷையூர் அர்ச். அந்தொனிஸ் விளையாட்டுக் கழக

ஐந்து தினங்கள்

## கீரிமலையில்நடைபெற்றசகஸ்ர ஜோதிர்மண்டல சங்காபிஷேகம்

அளவெட்டி, சனி

இலங்கையில் முதல் முறையாக சகஸ்ர ஜோதிர் மண்டல சங்காபிஷேகம் கீரிமலை சிவன் கோவிலில் நடைபெற்றது. இச்சங்காபிஷேகத்தை பத்தாயிரத்துக்கதிகமான பக்தர்கள் கண்டுகளித்தனர்.

சங்காபிஷேகம் 27-ம் திகதி முதல் 5 தினங்கள் நடைபெற்றது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் கீரிமலை சிவன் ஆலய தர்மகர்த்தா பிரமஸ்ரீ கு. நகுலஸ்வரக்குருக்கள் செய்திருந்தார்.

முதலாம் நாளும், இரண்டாம் நாளும் கீரிமலைக்கேணியில் அபிஷேகத்துக்கு தீர்த்தம் எடுக்கபபட்டது. இதன் பொருட்டு இரு தினங்களும் பொதுமக்கள் பாவிப்புக்கு கேணி தடைசெய்யப்படிருந்தது.

அநேக சிவப்பிராமணர்கள் இத்தீர்த்தம் எடுக்கும் வைபவத்துக்காக நகுலகிரி தீர்த்தக் கரையில் கூடி விசேட சாந்திசெய்தார்கள். அதன்பின் மண்டபத்தில் விசேட புண்ணியாகவாசனமும், வருணபூசையும், கங்கா பூசையும், விக்கினேஸ்வர பூசையும், அனுக்ஞை, வாஸ்துகாந்தி, அங்குரம் ரக்ஷாபந்தனம், ஆசாரியார் விசேடபூசை, வருணகும்ப பூசை ஆகியனவும் நடைபெற்றன.

அச்சமயம் பலநூற்றுண்டுகளுக்கு நடந்திராத விசேட சகஸ்ர நாம அர்ச்சனையும் கங்காதேவிக்கு நிகழ்த்தப் பெற்றது.

தீர்த்தமண்டபத்திலிருந்து ஆலய முன்றல் வரை மகர தோரணங்களால்அலங்கரிக்கப்பட்டிருந்தது. அன்றிரவு சோமவார உற்சவத்தின் கிரியைகள் நடைபெற்றன. பின்பு தீபதேவிகள் ஆவாகிக்கப்பட்டு யாகவேதிகையில் வைக்கப்பட்டன.

அடுத்து 3 நாட்களும் காலையும், மாலையும் விசேட மண்டல பூசையும் உலக க்ஷேமத்தின் பொருட்டு விசேஷ ஹோமங்களும் நடைபெற்றன.

1008 சோதியும் மூன்று நாளும் பிரகாசித்தவண்ணமிருந்தன.

இறுதிநாளன்று அம்மாளுக்குசகஸ்ரசோதிர் மண்டல சங்காபிஷேகம் நடைபெற்றது. இந்த அபிஷேகத்தையடுத்து அந்தணரின் வேத ஒலியுடன் மங்களவாத்திய இசை முழங்க சுமங்கலியர் தீபம் ஏந்திச் சுற்றிவர பிரதான கும்பங்கள் திருவீதி வலம் வந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. இதை அடுத்து முத்துதண்டிகையில் நகுலாம்பிகாசமேத நகுலேஸ்வர சுவாமி வீதி உலாக் காட்சிஇடம் பெற்றது.

இச்சங்காபிஷேகத்தை முன்னிட்டு ஒரு விசேட மலரும் வெளியிடப்பட்டிருந்தது. கீரிமலை ஆதீனகர்த்தா பிரமஸ்ரீ கு.பாலசுந்தர குருக்கள், மாவை ஆதீன கர்த்தா, இலங்கை இந்திய ஆதீனங்களில் இருந்து வந்த குருமார் ஆகியோர் வைபவத்தை நடத்தினர்.

"சிறு ஊழியர்களுக்கும் சிங்கள நிபந்தனை கேட்கும்

## அரசாங்கத்தில் இனிமேலும் இருப்பதில் நியாயமில்லை'

### — வட்டுக்கோட்டை எம். பி.

அராலி சனி

''அலுவலக மொழியென்ற போர்வையில் சிறு ஊழியர்களுக்கும் அவர்களின் முதிய வயதிலும், சிங்கள மொழித் தேர்ச்சியில்லையென்ற காரணத்திற்காக வேலைநீக்கம் செய்யப்படும் உத்தரவுகளை வழங்கி வரும் ஒரு அரசாங்கத்தில் தொடர்ந்தும் அங்கம் வகிப்பது நியாயமற்றது. இதுபோன்ற வேறுபல காரணங்களுக்காகவே நாம் ஆளும் கட்சியிலிருந்து விலகி எதிர்க்கட்சியில் சேர்ந்து கொண்டோம்''

இவ்வாறு அராலி கிழக்கு கலைமகள் கிராம முன்னேற் விஷயத்தில் தம்மாலான தைச் செய்வதாக அவர்கள் உறுதியளித்தனர்.

## 'ஆசிரியர் கடமையை உணரவேண்டும்'

பருத்தித்துறை, சனி

'சேவை மனப்பான்மையும் கடமை உணர்ச்சியும் படைத்த ஆசிரியர்கள் அகில இலங்கையிலும் சேவைசெய்ய ஆயத்தமாக இருக்கவேண்டும். அதே நேரத்தில் அவ்வாசிரியருக்கான வீட்டு வசதிகள் கல்வி அபிவிருத்தி வசதிகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரியாவில் இஸ்ரேலியர் கைப்பற்றி வைத்திருக்கும் கோலான் பிரதேசத்தில் ஒரு நகரை அரபுக் 'கொமாண்டோ' படையினர் சுமார் மூன்று மணி நேரம் கைப்பற்றித் தம் வசம் வைத்திருந்ததாக 'அல்பட்டா' என்ற அரபு கொரில்லாப் புரட்சி இயக்கத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறினர்.

...தார். தமது தரப்பில் இரு 'கொமாண்டோ'க்கள் கொல்லப்பட்டதாக அவர்கள் அறிவித்தனர்.

இரு முனைகளில் நடந்த சண்டையில் நான்கு 'கொமாண்டோ'க்களைக் கொன்றுவிட்டதாகவும், தமது தரப்பில் இருவர் கொல்லப்பட்டதாகவும் இஸ்ரேலியர் அறிவித்தனர்.

## ஜேர்மன் 'மார்க்' இற்கு திடீர் கிராக்கி

லண்டன், மே 3

மேற்கு ஜெர்மன் மார்க் நாணயத்துக்கு உலகமார்க்கட்டில் பெரிய கிராக்கி ஏற்பட்டிருக்கின்றது. மார்க்கின் மதிப்பு அதிகரிக்கப்படலாம் என்ற காரணத்தினலேயே இந்தக் கிராக்கி ஏற்பட்டிருக்கின்றது. மேற்கு ஜெர்மன் அரசு மார்க்கின் மதிப்பை உயர்த்தப் போவதில்லை என்று திரும்பவும் வலியுறுத்தியுள்ளபோதிலும் ஐரோப்பிய சந்தையில் அதற்கு கிராக்கி அதிகரித்துள்ளது.

மார்க் நாணயத்துக்கு கிராக்கி ஏற்பட்டிருக்கும் அதே வேளையில் பிரஞ்சு பிராங்கின் மதிப்பு வீழ்ச்சியடைந்துள்ளது. பிரான்சில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருப்பதும் இதற்கு ஒரு காரணமாகும். பிராங்கின் நிலைமையை சமாளிக்க மத்தியவங்கி தலையிட வேண்டியிருந்தது. லண்டனில் பவுண் மதிப்பும் டாலர் மதிப்பும் வீழ்ச்சியடைந்தன ஆனல் ஸ்டெர்லின் மார்க்கட்டின் நிலை வேறெப்போதையும்விட உச்சநிலையாகவிருந்தது.

## நோய் தீர்க்கும் விளையாட்டு

பெர்லின், மே 3

விளையாட்டுகளை மருந்தாகப் பயன்படுத்துவதற்காக 200 சுகாதார விளையாட்டுச் சழகங்கள் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் அமைக்கப்படவிருக்கின்றன இப்பொழுது இத்தகைய 15 கழகங்கள் பெர்லினில் இருக்கின்றன.

தொழில் காரணமாக உடல்நலம் குன்றியிருப்பவர்களுக்கு விளையாட்டு ஓர் ஒளடதமாகும். மற்றும் வாத நோய்கள் நீரழிவு முதலிய நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்குச் சிற்சில விளையாட்டுகள் உண்டு என்று இக்கழக அதிபர்டாக்டர் பிரிங்கேயர் கூறினர்.

## அமெரிக்காவில் இலங்கை நீதியரசர்

வாஷிங்டன், மே 3

இலங்கையில் நடைமுறையிலிருந்து வரும் நீதிபரிபாலன முறைகளையிட்டு அறிவதில் அமெரிக்க மக்கள் பெரிதும் சிரத்தை காட்டுவதாக இங்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் இலங்கை நீதியரசர் சி. ஜி. வீரமந்திரி குறிப்பிட்டார்.

கனடாவிலும் அமெரிக்காவிலும் 30 நாட்கள் சுற்றுப்பயணத்தை மேற்கொண்ட நீதியரசர் வீரமந்திரி தற்பொழுது அமெரிக்காவில், இலங்கை நீதிபரிபாலன முறைகளையிட்டு உரை நிகழ்த்துவதிலும், அமெரிக்க நீதிபரிபாலன முறைகளையிட்டு அறிந்துகொள்வதிலும் நாட்டம் செலுத்தி வருகிறார். கேம்பிரிட்ஜிலுள்ள ஹேவார்டு பல்கலைக்கழகம், நியூஹேவனிலுள்ள யேல் பல்கலைக்கழகம் ஆகியவற்றில்தான் இலங்கை நீதிபரிபாலன முறைகளையிட்டு விளக்கம் கொடுத்தபோது திரண்டு நின்ற மக்கள் ஆர்வத்துடன் தன்னுடைய கருத்துக்களை கேட்டதாக நீதியரசர் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

## பெண்களுக்கும் உரிய இடம்

பெர்லின், மே 3

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் ஆட்சிமன்றத்தில் 500 பிரதிநிதிகள் இருக்கின்றனர். அவர்களில் 153 பேர் பெண்களாவர்.

மாகாண சட்டசபை உறுப்பினர்கள் 1917 பேர்களில் 923 பேர் அதாவது 49 வீதம் பேர் மாதர்களே உள்ளூராட்சி மன்றங்களின் நிரந்தரக் கமிட்டிகளில் பெண்மணிகள் 97,432 பேர் அங்கத்தினர்களாக இருக்கின்றனர்.

...வதாகக் கூறப்பட்டபோதிலும் பல அமைச்சர்கள் அவருடைய நடவடிக்கைகளை ஆதரித்துப் பேசிவருகிறார்கள். தொழிற்சங்க நடவடிக்கைகள் சம்பந்தமாக திரு வில்சன் கொண்டுவரவிருக்கும் மசோதாவைத் தோற்கடிக்கச் செய்வதற்கு தொழிற்கட்சி அங்கத்தவர்களே சிலர் முயற்சி எடுப்பதாக முன்னர் செய்திகள் கூறின. மேலும் பல அமைச்சர்கள் வில்சனை ஆதரித்து வெளிப்படையாகப் பேச விருப்பதாகத் தெரிகிறது.

திருவில்சன் இதுவரைக்கும் தம்மை வெளியேற்றுவதற்கு நடப்பதாகக் கூறப்படும் கிளர்ச்சிகள்பற்றி வெளிப்படையாக எதுவும் கூறவில்லை. நாளையதினம் அவர் இதுபற்றி பகிரங்கக் கூட்டமொன்றில் உரை நிகழ்த்துகையில் ஏதாவது கூறக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஹெலிகொப்டர் காப்பாற்றியது

காண்மாண்டு, ஏப். 2

நேபாளத்தில் தவளகிரி மலை உச்சியை அடையும் முயற்சியிலீடுபட்டிருக்கையில் ஆபத்தில் சிக்கிய இரு அமெரிக்கமலையேறும் வீரர்களை இன்று ஹெலிகொப்டர் ஒன்று காப்பாற்றியது,

இவர்கள் 48 மணிநேரம் உயிருக்கப் போராடிக் கொண்டிருந்தார்களெனவும், சீதோஷ்ணநிலை சரியாகவில்லாதிருந்ததால் தேடுதலில் தாமதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இவர்களுடன்சென்ற 7 பேர் மாண்டுபோனது தெரிந்ததே.

...றம் பெற்றிருந்தார். ஆனல் இவருக்கு இப்போது இடமாற்றம் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 17 வருடங்கள[ை] வெளி மாகாணத்தில் தாம[்] கடமையாற்றியுள்ளதாகவும்இடமாற்றம்பெற்றதும் கூப்பன்களையும் மாற்றி, தாம் இருந்த வீட்டையும் காலிசெய்துவிட்டுக் கரணவாய்க்கு வந்துவிட்டதாகக் குறிப்பிட்ட ஆசிரியர் கல்வி இலாகாவுக்குத் தெரிவித்துள்ளார்.

## குடும்பத்தகர கணவன் தற்கொலை

அளவெட்டி, சனி

குடும்பத்தில் ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து கணவன் உயிரை மாய்த்துக் கொண்டார்.

கட்டுவனைச் சேர்ந்த கணபதி செல்லன் என்பவருக்கும், அவர் மனைவிக்குமிடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக கணவர் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்ததாகத் தெரியவந்தது.

கட்டுவன்பற்று மரண விசாரணை அதிகாரி திரு. நாகலிங்கம் இதுபற்றி விசாரணை நடத்தியபின் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## இளைஞன் தற்கொலை
### தந்தை கடிந்தாராம்

அளவெட்டி, [சனி]

தந்தைகண்டித்ததால்மனமுடைந்த 17 வயது மாணவன் உயிரை மாய்த்துக் கொண்டார்.

இளவாலையைச் சேர்ந்த கனகரத்தினம் என்பவரின் மகன் புஷ்பரத்தினம் திருவிழாவுக்குச் சென்றுவருவதாகத் தந்தையிடம் கூறிவிட்டு வீட்டிலிருந்த பணத்தைச் சொல்லாமல் எடுத்துக்கொண்டு படத்துக்குச் சென்று வீடுதிரும்பியபோது மகனைக் கண்டித்ததாகவும் இதனையடுத்து அடுத்தநாள் பாடசாலைக்குச் செல்லும்போது புஷ்பரத்தினம் வீதியில் மயங்கி விழுந்ததாகவும் இவரின் சகோதரி காங்கேசன்துறை வைத்தியசாலைக்கு அவரை எடுத்துச் சென்றதாகவும் ஆஸ்பத்திரியில் அவர் மரணமானதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. மரண விசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. வி. குமரகுரு தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## கி. ச. தேர்தல்

வேலணை, சனி

வேலணை கிராம சபைத் தேர்தல் இம்மாதம் 23-ந் திகதிநடைபெறவிருக்கிறது.

எல்லைத்தகராறு பற்றிபேச

# சீனவுக்கு மீண்டும் சோவியத் அழைப்பு

மாஸ்கோ,மே3

சோவியத்-சீன எல்லைத் தகராறுகள், கப்பல்போக்குவரத்து ஆகியவைபற்றிஇரு நாடுகளும் கூடிப்பேச வண்டுமென்று சோவியத்யூனியன் மீண்டும் சீன அரசுக்கு அழைப்புவிடுத்திருக்கின்றது ஒருமாதகாலத்தில் விடுக்கப்பட்ட மூன்ருவது அழைப்பாகும் இது ஒருவாரத்துக்குமுன்னர் விடுத்த அழைப்புக்கும் இன்னும் செஞ்சீன அரசு பதிலளிக்கவில்லை.

உறைந்துகிடக்கும் உசூரி ஆற்றின் நடுவில் இருக்கும் டமான்ஸ்கி தீவுப் பிரச்னை குறித்தும், வேறுபலபோக்குவரத்துப்பிரச்னைகள் குறித்தும் இரு நாடுகளின் எல்லைக் கமிஷன்கள் சோவியத்சைபீரியாவிலுள்ள ஓர் இடத்தில் சந்தித்துப் பேசவேண்டும் என்று சோவியத்யூனியன் ஆலோசனை தெரிவித்துள்ளது. இந்த டமான்ஸ்கி தீவு சம்பந்தமாகவே அண்மையில் இருநாட்டு எல்லைக்காவலர்களும் படுமோசமாக மோதிக்கொண்டு இரத்தக் களரி ஏற்பட்டது. இந்த மோதலில் சுமார் 50சோவியத் வீரர்களும் எண்ணிக்கை குறிப்பிடப்படாத சீனக் காவலர்களும் கொல்லப்பட்டனர். அதன்பிறகு இரு நாடுகளுக்குமிடையில் நேச உறவு மேலும் பாதிக்கப்பட்டது எல்லைப்பகுதியில் தொடர்ந்து பதட்டநிலை இருந்து வருகின்றது.

இருநாட்டு அதிகாரிகளும் நேருக்குநேர் சந்தித்து எல்லைத்தகராறுகள் பற்றிப் பேசி முடிவுக்கு வரவேண்டும் என்று கடந்த மாதமும் சோவியத் விடுத்த ஓர்அழைப்பை சீனர்கள் ஆராய்ந்து வருவதாக முன்னர் செய்திகள் கூறின. ஆனல் இதுவரை அவர்கள் அதனை ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை.

சீனவுடனன எல்லைத் தகராறுகள் விஷயத்தில்சோவியத் யூனியன் மிகவும் கவலைகொண்டிருப்பதையே திரும்பத்திரும்ப பேச்சுவார்த்தைகளுக்கு வரும்படி அது சீனவை அழைப்பது காட்டுகிறது என்று நிருபர்கள் தெரிவிக்கின்றனர்.

...பதிகளின் புத்திரராவர்

## வீரருக்குப் பாராட்டு

பருத்தித்துறை, சனி

பாஷையூர் அர்ச். அந்தொனிஸ் விளையாட்டுக் கழகமும், நெல்லியடி ஸ்பேஸ் கழகமும் பந்தாட்டப் போட்டியொன்றில் மே 8-ந் திகதிநெல்லியடிமத்தியமகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் மோதவிருக்கின்றன.

அண்மையில் பாங்கொக் சென்று திரும்பிய உதைபந்தாட்ட வீரர் திரு. கே. ஸ்ரீதரனைக் கௌரவிப்பதற்காக நடக்கும் இப்போட்டியில் முன்னுள் ஏ. எஸ். பி. திரு. வி. கே. ஆறுமுகம்பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வான்.

......

## புதிய நூல்நிலையம்

உடுப்பிட்டி, சனி

பொலிகண்டி கடற்கரையில் புதிய நூல்நிலையம் ஒன்று திறந்துவைக்கப்படவிருக்கின்றது பல வருடகாலமாக நூல்நிலையம் இன்றி இப்பகுதி மக்கள் அனுபவித்து வந்த கஷ்டம் இதனுல் நீங்குமெனக் கருதப்படுகிறது. இங்கு கல்வி நிலையம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

......

## திறப்புக்கோர்வை யாருடையது?

செம்மணிப் பாலத்துக்கருகில் திறப்புக்கோர்வை ஒன்று மறவன்புலோ சோ. தங்கராசாவால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## வெசாக் கொண்டாடினர்

அளவெட்டி, சனி

காங்கேசன்துறைப் பகுதியில் நேற்றும், நேற்றுமுன் தினமும் வெசாக் தினம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது

அளவெட்டி, சனி

சுன்னுகம் பட்டினசபை ஆராய்வுக்கு ஆதரவில் இம்மாதம் 8-ம் திகதி பட்டின சபை சைவநூல் நிலையத்தில் 'இலங்கைத் தமிழரும், பூர்வீக இலங்கையும்' என்னும் விடயம் பற்றி திரு. ஜே. ஆர். சின்னத்தம்பி உரையாற்றுவார்.

...ருந்தும் அங்கம் வகிப்பது நியாயமற்றது. இதுபோன்ற வேறுபல காரணங்களுக்காகவே நாம் ஆளும் கட்சியிலிருந்து விலகி எதிர்க்கட்சியில் சேர்ந்து கொண்டோம்''

இவ்வாறு அராலி கிழக்கு கலைமகள் கிராம முன்னேற்றச்சங்க சனசமூக நிலையத்தாரின் 22-வது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போது தமிழரசுக் கட்சியின் பொதுக்காரியதரிசியும் வட்டுக்கோட்டைத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினருமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினர். இவ்விழா நேற்று இரவு திரு. அ. பாலசிங்கநாயகம் தலைமையில் அராலி கிழக்கு வாலையம்மன் ஆலய வீதியில் இதற்கென விசேஷமாக அமைக்கப்பட்ட கலைமகள் சனசமூக நிலைய முன்னுள் தலைவர் டாக்டர் திரு. அ. நவரத்தினசிங்கம் அரங்கில் கொண்டாடப்பட்டது. விழாவில் செனட்டர்திரு. நீதிராசா விசேஷமாகக் கலந்து கொண்டு உரையாற்றினுர்.

திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்துபேசும் பொழுது மீனவர் சமுதாயத்தின் தொழில் வளர்ச்சி குடியிருப்பு வளர்ச்சிகளில் தமக்கு அக்கறை உண்டென்றும் தமது தொகுதிக்குத் தரப்பட்ட 7 கைத்தறி நிலையங்களில் மூன்றை அராலிவடக்கு வட்டுக்கோட்டை கிழக்கு காரைநகர் தோப்புக்காடு ஆகிய பகுதிகளில் வசிக்கும் மீனவர்களுக்கே வழங்கியுள்ளதாகவும் கூறினுர்.

செனட்டர்நீதிராசா பேசுகையில் கூறியதாவது: ''நாம் நமது சுயமுயற்சிகளினுலேயே நமது தேவைகளைப்பூர்த்திசெய்து கொள்ள முயலவேண்டும். அதற்கு அரசாங்க ஆக்கமும் ஊக்கமும்தேவைப்படின் தொகுதி எம்.பி. அதனைக் கவனிப்பார்.''

மற்றும் பண்டிதர் திரு. க. மயில்வாகனம், அராலி கி.ச.தலைவர் திரு. இ. நாகலிங்கம், இலங்கை 'ஹாட்வெயர்' கூட்டுத்தாபன நிர்வாக உறுப்பினர் திரு. கா. செல்வராசா ஆகியோரும் உரையாற்றினர்.

திரு. எம். ஏ. குலசீலநாதனின் இசைக்கச்சேரியும் ச. ச. நிலைய உறுப்பினரின் நாடகமும் விழாவில் இடம் பெற்றன,

இப்பகுதிக்கு ஒரு நெசவு நிலையமும் வீடில்லாதவறிய மீனவர்களுக்கு ஒரு வீட்டுத் திட்டமும் அளித்து உதவ வேண்டுமென எம். பி.யிடமும் செனட்டரிடமும் சங்க தலைவர் கேட்டதற்கு இவ்...

...யும் கடமை உணர்ச்சியும் படைத்த ஆசிரியர்கள் அகில இலங்கையிலும் சேவைசெய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் அவ்வாசிரியருக்கான வீட்டு வசதிகள் கல்வி அபிவிருத்தி வசதிகள், வாழ்க்கை வசதிகள் ஆகியவற்றை அரசாங்கம் செய்து கொடுக்கவேண்டியதும் அவசியம்.'

வதிரி இருதயக் கல்லூரியிலிருந்து இடமாற்றலாகிச் செல்லும் திருவாளர்கள் ஏ. கிஸ்தோப்பர், எஸ். லீலஸ், எஸ். அந்தோனிப்பிள்ளை, வி. ந[டராச]சா, எஸ். ஞானரத்தினம் ஆகியோருக்கு வதிரி திரு. இருதயக் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் அளித்த பிரியாவிடை வைபவத்தில் ஆசிரியர் திரு. ஏ. லிகோரி மேற்கண்டவாறு கூறினுர்.

அதிபர் திரு. தோமஸ் ஈப்பன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. எஸ். ஆறுமுகம் உட்படப் பலர் உரை நிகழ்த்தினர்.

இடமாற்றம்பெற்றுச் செல்லும் ஆசிரியருக்கு மதிய போசன விருந்தும், பரிசில்களும் வழங்கப்பட்டன.

......

## கண்டெடுத்த சிலைக்கு ஆலயம்

உடுப்பிட்டி, சனி

நெற்கொழு திருப்பணிச் சபை வடக்கு வீதி செப்பனிடும்போது விநாயகர் உருவம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கண்டெடுக்கப்பட்ட விநாயகர் சிலை ஆலமரத்தின் கீழ் வைத்து பிரதிஷ்டை செய்யப்பட்டது. சிரமதானம் மூலம் ஆலயம் ஒன்றை அமைக்கவும் அவ்வூர் மக்கள் முன்வந்துள்ளனர் இத் திருப்பணி வேலைகளை செய்வதற்கென. ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது. இத் திருப்பணிக் குழுவின் தலைவராக உடுப்பிட்டி கிராமசபை 10-ம் வட்டார உறுப்பினர் திரு. செ. ஈஸ்வரலிங்கப் பெருமாளும் உப தலைவராக தா. தேவகண்ணியாவும், காரியதரிசியாகத் திரு. சு. குணரத்தினமும்- உபகாரியதரிசியாகத் திரு. பரராஜசிங்கமும், தனதிகாரியாகத் திரு. ஆர். துரைலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஒன்பது பேரடங்கிய பணிக் குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

'ஆண்டவனை வழிபட்டு பணிவுடன் வாழ்ந்து தன்னலத்தை மறுத்தால் தான் நல்வழி கிடைக்கும்.' — மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், சௌமியவருஷம் சித்திரை மாதம் 22-ந் திகதி (4-5 69)


## தமிழர் நிலைமை (2)

நாட்டின் அரசியல் வாழ்க்கையிலே தங்கள் மானத்துக்கும் கண்யத்துக்கும் உகந்ததோர் அந்தஸ்தைப்பெறுவதற்காக, தமிழர் இதுவரை கையாண்ட முறைகளையும் நடவடிக்கைகளையும் விருப்பு வெறுப்பின்றி நிதானமாகப் பரிசீலனை செய்வதாயின், சில சமயத்தில் விவேகமற்ற செயல்கள் செய்யப்பட்டும், முறைகள் கையாளப்பட்டுமிருப்பதை உணரலாகும். தவறுகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

தவறு செய்வது மனித சுபாவம். இலங்கையிலுள்ள தமிழ்ச் சமூகத்தவருக்கு இதனுல் தோல்விகளும் இடைத்துள்ளன. அவர்களது பலவீனங்களை ஒப்புக்கொள்ளுவது நல்லது. தமிழர் தங்கள் தவறுகளையும் தோல்விகளையும் உணராமல், பிற சமூகத்தவரின் தவறுகளையும் தோல்விகளையும் பற்றியே சொல்லிக்கொண்டிருப்பதால், எவ்வித பயனுமேற்படப்போவதில்லை. இன்று தமிழ் மக்கள் படு பாதாளத்தில் விழுந்துள்ள அவல நிலையிலிருந்து தலை தூக்கி எழவேண்டுமாயின், ஏற்கனவே பல தமிழ் அரசியல் கட்சிகள் உள்ளிட்டுத் தமிழ்த் தலைவர்களும், தமிழ் சமூகத்தவரும், தனிப்பட்டவர்களும் செய்த காரியங்களையும், இன்று மேற்கொண்டுள்ள கொள்கைகளையும் பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

இக்காலத்தில் மட்டுமல்ல முன்னைய காலத்திலும்கூட, ஒரு சமூகத்தின், மக்களின் நல உரிமைகள் பாதுகாக்கப்படுவதெல்லாம், பல விஷயங்களையும் பொறுத்ததாக இருக்கும். அரசியல் பலத்தைப் பெற்றிருப்பதுடன், பொருளாதார வளங்கள், விவசாய, கைத்தொழில் அபிவிருத்திகள், கல்வி கலாச்சார விஷயங்களில் மேம்பாடு, உயர்ந்த நெறிக [illegible]

தமிழருக்கு இத்திட்டம் பாதகமாகவுமுள்ளதென்பது கண்கூடு. உண்மையில் இந்த அரசியல் திட்டம் இலங்கையிலுள்ள சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் உள்ளிட்டு எல்லா மக்களின் நலனுக்கும், முன்னேற்றத்துக்கும், மகிழ்ச்சியான வாழ்வுக்கும் நல்ல தல்லவென்றே கூறவேண்டும்.

இதைப் பற்றி மேலும் கவனிக்கு முன்பாக, இன்றுள்ள அரசியல் அமைப்புத்திட்டம் எப்படி, யாரால் உருவாக்கப்பட்டதென்பதைச் சற்றே கவனிப்பது நல்லது. இத்திட்டத்தை இலங்கை மக்கள் தயாரிக்கவில்லை. இந்தியா போன்ற நாடுகளிலே, அரசியல் அமைப்புச் சபை மூலம் மக்களின் கூட்டு ஆலோசனைகளால் இது உருவானதன்று. இது கண்மூடித்தனமாக பிரிட்டிஷ் அரசியல் முறையைப் பின்பற்றி தயாரிக்கப்பட்டதாகும். நமது நாட்டின் தேவையையோ, பல சமூகங்களின் நிலைமையையோ, சரித்திர வரலாறுகளையோ சற்றும் கவனிக்காமல், மனம் போன போக்குப்படி எழுதித் தள்ளப்பட்டது. அவ்வித சோல்பரி அரசியல் அமைப்பே இன்று இலங்கையில் அமுலிலுள்ளது. மேற்கத்திய பிரிட்டிஷ் அரசியல் வாதிகளின் கருத்துக்களும் பிரிட்டிஷ் அரசியல் அமைப்பு நிபுணர் என்று கூறப்பட்ட சேர் ஐவர் ஜென்னிங்ஸும் சேர்ந்து, பிரிட்டனுக்கு எது நல்லதோ அதுவே இலங்கைக்கும் நல்லதாக இருக்கவேண்டும் என்ற பெரிய தவறான எண்ணத்தில் இது உருவாக்கித்தரப்பட்டுள்ளது. பிரிட்டனின் அரசியல் அமைப்பும் அரசியல் சிந்தனைகளுமே மிகச் சிறந்ததென்பது அவர்களது அசைக்கமுடியாத குருட்டு நம்பிக்கை.

இதன்பயனாக, இலங்கையிலுள்ள பல சமூகங்களின் [illegible]

### நாவலர் சிலை திறப்பு விழா

# திருவாவடுதுறை ஆதீன வித்வான் தண்டபாணி தேசிகர் வருகிறார்

## யாழ். நகரெங்கும் ஊர்வலம்

## 3 நாள் பெருவிழா ஏற்பாடு

—நமது காரியாலய நிருபர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூரில்நாவலர்சிலை நிறுவுவது சம்பந்தமாகவும், நாவலர்சிலை ஊர்வலம் நாவலர் பெருவிழா ஆகியன யாழ்ப்பாணத்தில் நடாத்துவது சம்பந்தமாகவும்ஆலோசனை நடாத்துவதற்காககூட்டம் ஒன்று நேற்றுமுன் தினம் மாலை யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மைதானத்தில்நடைபெற்றது.

சைவபரிபாலன சபைத் தலைவர் திரு. வே. நாகலிங்கம் தலைமையில்நடைபெற்ற இக்கூட்டத்துக்கு சுமார் 75 தமிழ்ப் பிரமுகர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். இக்கூட்டத்தை ஆறுமுகநாவலர் சபை யாழ்ப்பாணப் பகுதித் தலைவரான உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம் பிள்ளை ஒழுங்கு செய்திருந்தார். ஆறுமுக நாவலர் சபைச் செயலாளரான திரு. எம். ஸ்ரீகாந்தா இக்கூட்டத்துக்கு விசேஷமாக வருகை தந்திருந்தார்.

### ஊர்வலம்

அடுத்தமாதம் 21-ந் திகதி கொழும்பிலீருந்து ஆரம்பமாகும் நாவலர்சிலை ஊர்வலம் கண்டி, பேராதனை பதுளை, ஹட்டன், மட்டக்களப்பு, திருமலை, வவுனியா ஆகிய இடங்களுக்கு ஊடாக 36-ந் திகதி காலை கிளிநொச்சியை வந்தடையும்.

அப்போது யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், உயர்தர அரசாங்க அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கிளிநொச்சியில் வரவேற்பார்கள்.

சிலை ஊர்வலம் சாவகச்சேரி, நெல்லியடி, உடுப்பிட்டி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, அச்சுவேலி, தெல்லிப்பளை, வட்டுக்கோட்டை, தெல்லிப்பழை,காரைநகர், வேலணை, புங்குடுதீவு ஆகிய இடங்களுக்குச் சென்று 28-ம் திகதி மாலை யாழ்ப்பாண நகரை வந்தடையும்போது யாழ்ப்பாண நகர முதல்வரும், [illegible]

அன்று மாலையிலிருந்து இரவு 9 மணிமரை நகர மண்டப முன்றலில் பொது மக்கள் பார்வைக்காகச் சிலை வைக்கப்பட்டு அன்றிரவே நல்லூரிலுள்ள நாவலர் காணிக்கு எடுத்துச்செல்லப்பட்டுஅங்கு நிறுவப்படும்.

### திறப்புவிழா

29-ந் திகதி காலை நாவலர்சிலை திறப்புவிழா நடைபெறும். அதற்கு முன்னர் மங்கள வாத்தியங்களுடன், நாவலர்படங்களுடனும், நாவலர் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் சித்திரக் காட்சியுடன் ஊர்வலம் ஒன்று வண்ணை சிவன்கோவிலிலிருந்து நல்லூரை வந்தடையும்.

### பெருவிழா

அடுத்தமாதம் 29.30, ஜூலை 1 ஆகிய மூன்றுதினங்களும் நல்லூர் கோவில் வடக்குவீதியில் அமைக்கப்படும் பந்தலில் நாவலர் பெருவிழா நடைபெறும். கடந்த 100 ஆண்டுகளாக நாவலர் பெருமான்பற்றி வெளிவந்த பல கட்டுரைகளுடன் 400 பக்கம்கொண்ட நாவலர் ஞாபக நூல்ஒன்றும், நாவலர் சிலை திறப்புவிழா மலர் ஒன்றும் விழாவில் வெளியிட்டு வைக்கப்படும்,

விழாவில்திருவாவடுதுறை ஆதீனம் தண்டபாணி தேசிகரும், திருச்சி நடராஜனின் கிளாரினெட் குழுவினரும் சலந்துகொள்ள இங்கு வருவதாக விழாக்குழுத்தலைவரான திரு. ரி. முருகேசம் பிள்ளை தெரிவித்தார்.

நாவலர் பெருவிழாவில் நாவலர் புத்தகக் கண்காட்சி முக்கியமாக இடம்பெறும். விழா முழு ஒழுங்குகளையும் கவனிக்க திரு. முருகேசம் பிள்ளை தலைமையில் 7 உப உபகுழுக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (கா. நி.)

## பயங்கர காய்ச்சல்

உடுப்பிட்டி, சனி

கரணவாய்ப் பகுதியில் பயங்கர ஜுரம் பரவி வருகின்றது. இக்காய்ச்சலால் பீடிக்கப்பட்ட பலர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## அரிசி விலை இங்கு கூடவும்

நுவரெலியா, சனி

கொழும்பிலும் பார்க்க நுவரெலியாவில் அரிசிவிலை கூடியுள்ளதாக நுவரெலியாவில் விடுமுறையைக் கழிக்கச் சென்றுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர். ஒருபடி [illegible] ரூபா 1-50 தொடக்கம் ரூபா 1-80 வரை விற்கிறார்கள். இதே அரிசியை கொழும்பில் குறைந்த விலைக்குப் பெறக் கூடியதாக இருக்கிறது. ஒருபடி [illegible] ரூபா 1-0 தொடக்கம் ரூபா 1-10 வரை [illegible]

## தொழில் இல்லையா?

### இளம் பெண் தற்கொலை

மாத்தறை சனி

தொழில் கிடைக்காததினுல் விரக்தியுற்ற பயிற்றப்பட்ட ஆசிரியர் ஒருவர் நஞ்சிடம் தஞ்சம் புகுந்தார் இந்தப் பரிதாப சம்பவம் மாத்தறைப் பகுதியில்நடைபெற்றது.

எச். எம்.அனுலா என்ற 33 வயது இளம்பெண் ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சையில் தேறி, ஆசிரிய வேலைக்காக முயற்சித்துவந்தாராயிலும் தொழில் கிடைக்கவில்லை என்றும் இதனுலேயே இவர் தற்கொலை செய்து கொண்டதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## 'ஈழநாடு' செய்திதலைப்புப்போட்டி-(2)

இந்தப் போட்டியில் பங்குபற்றிய நேயர்களுக்குள்ளே இத்தனை வருங்கால பத்திரிகையாளர்களும் இருப்பார்களோ என்று திகைக்கும் வண்ணம் அத்தனை சிறந்த விடைகள் வந்தன. எல்லாவற்றிலும் மிகச்சிறந்த விடையை தெரிவுசெய்வது போட்டிக் குழுவுக்கு பெரும் திண்டாட்டமாகி விட்டது. ஈற்றில் அது தெரிந்தெடுத்த விடை இதுதான்:

### 'அணுமிரண்டது, அம்புலி சிரித்தது'

இதை எழுதி ஐந்து ரூபா பரிசைப் பெறுபவர்:- வீ எஸ். எஸ். மணி, 257, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**பாராட்டுக்குரியவை:-**

பின்வரும் விடைகள் பாராட்டுக்குரியன: 'திங்களில் நிகழ்ந்த திகைப்பூட்டும் சம்பவம்', 'அண்ட வெளி வீரருக்கு அம்புலியில் ஆபத்து', 'தண்மதியில் மண்ணவரின் தத்தளிப்பு', 'அணுவுக்குமஞ்சாத அம்புலி பிராணி'.

### இன்றைய போட்டி

## ஐயாறன் எழுதுவது

"அப்பனே சிவனே
வண்ணை, அணைதரு
ஞானமூர்த்தி,
வெப்பமார் வெயில்
மழைக்கும், வெளியிலே
நின்ற எம்மை,
ஒப்பிலா துனது கோயிற்
குட்புற அழைத்துவந்த,
செப்பமார் பெரியோர்
எல்லாம் திருவுற அருள்
செய்வாயே"

என்ற இந்தப் பாடலைச் சுமார் 13 வருடங்களுக்கு முன்பாக (8-7-56), வண்ணை நகர் சிவன்கோயிலில் ஹரிஜனங்கள், அப்பனுன ஸ்ரீ வைத்தீஸ்வரப்பெருமானின் பெருங் கருணையினுலே முதல்முதல் உட்சென்று தரிசித்தபோது, சைவப்புலவர் வல்லிபுரம் அவர்கள் உளம் நெகிழ்ந்து உடன் நன்றியுடன் அக்கோவிலில் பாடியதாகும்.

இப்பாடலைக் ஆசிரியர் ஆ. ம. செல்லத்துரை அவர்கள் நேற்று முன் தினம், யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெற்ற ஆலயப் பிரவேசம் சம்பந்தமான கூட்டத்தில் உணர்ச்சி ததும்ப ஞாபகப்படுத்தியது கேட்டோர் உள்ளத்தைத் தொட்டது.

உள்ளத்தால் செய்த அந்தப் பிரார்த்தனையை இறைவன் நன்கு நிறைவேற்றியுள்ளதாகவும், ஆலயப் பிரவேசத்துக்கு முன்னின்று உழைத்த அப்பெரியோர்கள் பல சிறப்புகள் பெற்றதாகவும் அவர் விளக்கி, அச்சமயம் யாழ்ப்பாணத்தில் 3 பெரிய கோயில்களும் 21 சிறிய கோயில்களும் திறக்கப்பட்டதாயும் ஆனுல் அத்துடன் அது அசிரத்தை காரணமாக நின்றுவிட்டதாகவும், அம்முயற்சி தொடர்ந்து நடைபெற்றிருப்பின், இன்று அப்பிரச்னையே மறைந்திருக்குமென்றும் சரியாக அறிவுறுத்திஞர்.

0 0 0

யாழ்ப்பாணத்தின் சரித்திரத்திலே 8-7-56 பொன்னுன நாளாகும். அன்றுதான் இங்குள்ள 'மும்மூர்த்தி'களும் கருணை கூர்ந்து, "வெப்பமார் வெயில் மழைக்கும் வெளியேநின்ற" ஹரிஜன பக்தர்களை உள்ளே அழைத்து முதல்முதலாகத் தரிசனமளித்த புனிததினம்.

அந்த நாளை அநேகமாகப் பலரும் மறந்துவிட்டோம். அந்த இயக்கத்தையும் சைவப்பிரமுகர்கள் கைவிட்டதால், பிறர் தலையிடவும் பலாத்காரம் புகவும் இடமேற்பட்டது. வருடாவருடம் [illegible]

அண்டை வீட்டுக்காரனின் உதவியைநாடுவது இயற்கை தானே என்று இந்து மாமன்ற உப-தலைவர் லக்ஷ்மண அய்யர் இக்கூட்டத்தில் சரியாகக் கூறி, சைவக் குடும்பத்தின் பிரச்னையை அக்குடும்பத்தாரே அன்பு முறையில் அமைதியாகத் தீர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

இந்தியாவின் அடிமைத்தனத்துக்குக் காரணம், தீண்டாமைக் கொடுமை தான் என்று கண்டு, காந்தி அதை நீக்கத் தமது உயிரையும் பணயம்வைத்தார். இங்கு இலங்கையில் தமிழ்ச் சமூகத்தின் இன்றைய இன்னல்களுக்கும், இதே கொடுமைதான் காரணம் என்று கூறுவது தவருகுமா? கர்ம பலனில் நம்பிக்கையுள்ளவர்கள் இந்துக்கள். நம்மில் ஒரு சாராரைத் தீண்டாதவர் என்று ஒதுக்கினுல், பிறர் நம்மை அரசியல் தீண்டாதவராக ஒதுக்கித்தள்ளுவதில் என்ன வியப்பு?

இங்கு எல்லாக் கோயில்களும் சைவ சமூகத்தினர் அனைவருக்கும் கதவுகளைத் திறந்துவிடப்போவது நிச்சயம் என்று உறுதியாகக் கூறினுர் அய்யர். எப்பொழுது என்பதுதான் கேள்வி. தெய்வத்தின் அருளை உண்மையில் வேண்டினுல், மிகச் சங்கடமான பிரச்னையும் மிகச் சுலபமாகத் தீர்ந்துவிடுமல்லவா?

0 0 0

தங்களுக்கு இழைக்கப்படும் சமூகஅநீதிகளை சகிக்க முடியாமல், மதம் மாறுவதாக பயமுறுத்தி, கொழும்பிலே டாக்டர் மலலசேகராவுக்கு, இங்குள்ள ஹரிஜனத் தலைவர்கள் எழுதினுர்களாம். அவர் உடனே தமிழ்தெரிந்த ஒரு பிக்குவை இங்கு அனுப்பவே எங்களது சமூகக்குறைகளை அவரிடம் எடுத்துச்சொன்னேம். பண்டாரநாயகா ஆட்சிக்குவரும்போது இக்குறைகள் தீர்ந்துவிடுமென்று அந்தப் பிக்கு கூறினுர். 'அப்படியாயின் அவர் ஆட்சிக்கு வந்தபின் மத மாற்றம் பற்றி யோசிக்கிறேம்' என்று கூறிஅவரை அனுப்பிவிட்டதாக அக்கூட்டத்தில்தெரிவிக்கப்பட்டது.

சைவ சமூகத்தை விட்டுச் செல்ல ஹரிஜனங்களில் யாருக்கும் விருப்பமில்லை. தங்களுக்குஎப்படியும்விமோசனம் கிடைக்குமென்பது அவர்களது நம்பிக்கை

காலந்தாழ்த்தாமல் அதை நிறைவேற்றிவைக்க வேண்டிய கடமை சைவசமூகத் [illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மங்களையும் பொறுத்ததாக இருக்கும். அரசியல் பலத்தைப் பெற்றிருப்பதுடன், பொருளாதார வளங்கள், விவசாய, கைத்தொழில் அபிவிருத்திகள், கல்வி கலாச்சார விஷயங்களில் மேம்பாடு, உயர்ந்த நெறிகளுடன் கூடிய சமய வாழ்வு, தொழில், குடியிருப்பு வசதி முதலிய அவசியமான பல விஷயங்களிலும் தான் ஒரு சமூகத்தின் க்ஷேம நலன்' கள் தங்கியுள்ளன. ஒரு நாட்டின் நலத்துக்கும் இவையே பொருந்துவதாகும்.

நாம் இந்தக் காலத்திலே, ஜனநாயகமெனப்படும் சகாப்தத்தில் வசிப்பதால், நாட்டின் அரசியல் அமைப்புத் திட்டத்திலே மக்களின் நலன்கள் பெரிதும் தங்கியிருக்கின்றன. ஏனெனில் அரசியல் திட்டம் தான் அரசியல் அதிகாரத்தை வழங்குவதாக உள்ளது. அந்த அதிகாரமே மக்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் பாதிப்பதாகவுமுள்ளது. இதைச் சற்றே பரிசோதித்துப் பார்க்கையில் இலங்கையிலே இன்றுள்ள அரசியல் அமைப்புச் சட்டம், இந்நாட்டில் ஜனநாயகம் நல்லபடி வளருவதற்கு உகந்ததல்ல என்பதை உணரலாகும்.

இத்தரப்பட்டுள்ளது. பிரிட்டனின் அரசியல் அமைப்பும் அரசியல் சிந்தனைகளுமே மிகச் சிறந்ததென்பது அவர்களது அசைக்க முடியாத குருட்டு நம்பிக்கை.

இதன்பயனாக, இலங்கையிலுள்ள பல சமூகங்களின் நன்மைக்கு உகந்ததல்லாத 'கபினெட் முறை' என்று கூறப்படும் மந்திரிகள் ஆட்சி அமைப்பு இந்நாட்டின் மீது திணிக்கப்பட்டதாகும். இலங்கையின் இன்றைய அரசியல் சூழ்நிலைமையிலே, சமூக, சமய வேற்றுமைகளும், உணர்ச்சிகளும் அதிகமாகவுள்ள நிலையில், இந்த 'கபினெட்' ஆட்சி முறை இலங்கைக்குச் சிறிதும் உகந்ததாகாது. இன்றுள்ள ஆட்சிமுறையிலுள்ள பல தீங்கான அம்சங்களைப் பற்றி பின்னர் விரிவாக ஆராய்வோம். ஆனால் இதற்கு முன்னிருந்த டொனமூர் அமைப்புத்திட்டத்திலிருந்த 'கமிட்டி ஆட்சி' முறை இலங்கையிலுள்ள பல்வேறு சமூகத்தவரும் ஆட்சியில் பங்கு கொண்டு முன்னேறவும், இங்கு ஜனநாயகமும், சுயராஜ்யமும் வளர உதவுவதாகவும் இருந்ததென்பதை இச்சமயம் நினைவுபடுத்திக் கொள்வது பயனளிக்கக் கூடியதாகும்.

## தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணி

வல்வெட்டித்துறை, சனி

அரசாங்கத்தில் இருக்கும் வரை அரசாங்கம் செய்து வருவது சரியெனக் கூறிவந்தவர்கள் அரசாங்கத்தை விட்டு விலகியதும் அவை செய்வதெல்லாம் பிழையெனக் கூறி தமிழ்மக்களை ஏமாற்றி வருகிறார்கள். தமிழரசுக்கட்சியினர் இது தமிழ் மக்களை ஏமாற்றும் ஒருதந்திரமேயாகும். அதை தவிர தமிழ் மக்களை பாதிக்கும் சட்டங்களை அமைச்சரவையில் நிறைவேற்றும் வேளைகளில் எல்லாம் தமிழரசுக்கட்சி அமைச்சராக இருந்துவந்த திருச்செல்வம் மறுப்புத் தெரிவியாமல் உடந்தையாக இருந்து வந்துள்ளார். என்றி அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவரும், யாழ்ப்பாணம் எம், பியுமான திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் கியூ. சி. தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணி வல்வெட்டித்துறைக் கிளையை திறந்து வைத்துப்பேசுகையில் கூறினார்.

பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு. என். நடராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில்திரு. பொன்னம்பலம்தொடர்ந்து பேசுகையில் கடந்த காலங்களில் தெரிந்து எடுத்து அனுப்பியவர் இன்று வரை என்ன செய்து வந்தனர். தமிழ்மக்களை அழித்து ஒழிப்பதில் முனைந்தவர்களே தவிர மக்களுக்கு உழைத்தது ஒன்றுமில்லை. என்றார்.

உடுப்பிட்டி எம். பியும் உபசபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில் பொன்னம்பலம் தலைமையா, செல்வநாயகம் தலைமையா வட, கிழக்கு தமிழ் மக்களுக்கு வேண்டும் என்பதை வருகிற பொதுத் தேர்தல் நிச்சயம் எடுத்துக் காட்டத் தவறமாட்டாது. என்றார். மா. பொ. சி. எம். ஜி. ஆர். எனச் சொல்லி தமிழ் மக்களை திரும்பவும் ஏமாற்றி தேர்தலில் வெற்றி பெறுவதற்கு கையாளும் ஒரு தந்திரத்தை இப்போ கண்டுபிடித்துள்ளனர். நாங்களும் அவர்களிடம் விசுவாசமாகத் தான் இருக்கிறோம். ஆனால் அதைச் சொல்லி சிங்கள மக்களிடத்தில் பகைமையை ருளர்த்து. தமிழ் மக்களை படுகுழியில் விழுத்துவதை நாம் ஒரு போதும் பார்த்திருக்க மாட்டோம் என்று அவர் மேலும் சொன்னார்.

அட்வக்கேட் திரு. கே. மோதிலால்நேருவும் பேசினார்.

செல்வன் எஸ். சுந்தரராஜன் நன்றி கூறினார்.

வேலி, தெல்லிப்பழை, வட்டுக்கோட்டை, தெல்லிப்பழை, காரைநகர், வேலணை, புங்குடுதீவு ஆகிய இடங்களுக்குச் சென்று 28-ம் திகதி மாலை யாழ்ப்பாண நகரை வந்தடையும்போது யாழ்ப்பாண நகர முதல்வரும், உறுப்பினர்களும் வரவேற்பார்கள்.

படி [illegible] ரூபா 1-50 தொடக்கம் ரூபா 1-80 வரை விற்கிறார்கள். இதே அரிசியை கொழும்பில் குறைந்த விலைக்குப் பெறக் கூடியதாக இருக்கிறதாம். ஒருப[illegible]ரிசி ரூபா 1 தொடக்கம் [illegible] 1-10 வரை கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் விற்கிறார்கள்.

## 'விசாரணைக்கமிஷன் முன் குறைபாடுகளைக் கூறுவோம்'

உடுப்பிட்டி, ஞாயிறு

"சுமார் பத்துவருடங்கட்கு முன்னர் எவ்வித புரட்சியுமின்றி யாழ். மாவட்டத்தில் உள்ள புராதன சைவ ஆலயங்கள் சில தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் திறந்துவிடப்பட்டன இன்று அக்கோவிலகளில் பலரும் சமத்துவமாக நின்று வணங்குவதால் போதிய வருமானத்திற்கு இலக்காகியுள்ளன. பின்பு பல வருடங்களாகியும் ஆலயங்கள் எதுவும் திறந்துவிடக்கூடிய சூழ்நிலைகள் உருவாகவில்லை.

வடபகுதியிலுள்ள ஏற்றத்தாழ்வை ஒழித்துக்கட்ட ஒரு கமிஷன் நியதத்து விசாரணை செய்யப் பிரதமர் மிக விரைவில் யாழ்ப்பாணத்திற்கு ஒரு குழுவை அனுப்பவிருக்கும் தருணத்தில் நாம் பலவந்தமாக ஆலயப்பிரவேசம் செய்ய முயற்சிப்பது வெண்ணெய் திரண்டுவரும் போது தாழி உடைந்து போன கதை போலாகிவிடும். கமிஷன் விசாரணையின்போது நாம் இழந்து போன உரிமைகளையும் ஆலயங்களையும் பெறமுடியும்."

மேற்கண்டவாறு வட பிரதேச சமசமாஜ வாலிப முன்னணித் தலைவர் டாக்டர் திரு. எஸ். எஸ். மாசிலாமணி விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

யாவும் பொதுவுடமையாக வரும் நாள் தூரத்தில் இல்லை. ஆலய உற்சவங்களைப் பகிஷ்கரிப்பதன் மூலமே ஆலயப்பிரவேசம் நிறைவேறமுடியும். ஆலயங்களில் காவடி ஆடுதல், கரகம் ஆடுதல், உருவாடுதல் போன்ற மூடச்செலவுகளைச் சிறுபான்மைச் சமூகத்தவர்கள் நீக்கவேண்டும். இப்பணத்தை எமது சமூக மக்களின் கல்வி, பொருளாதார வளர்ச்சிகளில் செலவிடவேண்டும்.

நாதஸ்வரக் கலைஞர்கள் சிலர் ஒரு சாராரின் ஆலயங்களிலும், விழாக்களிலுமே தமது கலையைப் பரப்புகிறார்கள். மறுசாரார் மத்தியில் தமது கலையைப் பரப்ப மறுக்கிறார்கள். இக்கலைஞர்கள் பொதுவுடமையாக நின்றால் உற்சவகாலத்தை எதிர்பார்க்கவேண்டிய நிலை ஏற்படாது. கலைக்குச் சாதி, மதம் இல்லை.

எனவே நாம் பொறுமையைக் கடைப்பிடித்து கமிஷன் வரும்போது அவர்களுடன் ஒத்துழைத்து ஏற்றத்தாழ்வைக் குழிதோண்டிப் புதைக்க ஆவனசெய்ய வேண்டும். சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்குமுன்பு வடமராட்சிப் பகுதியில் சிறுபான்மைத் தமிழர் உடை, அணி போன்ற கலாச்சாரங்களிலிருந்து ஒதுக்கப்பட்டிருந்தனர். ஆனால் இன்று அந்த நிலைமை மாறிவிட்டது. இக்குறைபாடுகள் இவ்வளவு கெதியில் மறைந்துபோனது புரட்சிமூலமல்ல, மக்களின் மனமாற்றமும், கல்வி, பொருளாதார உயர்ச்சியுமேயாகும். காலப்போக்கில் சகல உரிமைகளும் படிப்படியாகக் கிடைக்கும்போது அவற்றை மட்டம் தட்டுவது புத்திசாலித்தனமானது அல்ல. உரிமையற்ற ஆலயங்களுக்குச் சிறுபான்மைச் சமூகத்தவர்கள் செல்லாது விடுவதன் மூலம் சில சலுகைகளைப் பெறலாம்.

### விற்பனைக்கு

சேர்விஸ் ஸ்ரேசன் முழு உபகரணங்களும் விற்பனைக்குண்டு. ஸ்ரான்லி சேர்விஸ் ஸ்ரேசன், 4/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். 990

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு மா[illegible] 4 [illegible] வெளியிடப்ப[illegible].

பாராட்டுக்குரியவை:-

பின்வரும் விடைகள் பாராட்டுக்குரியன: 'திங்களில் நிகழ்ந்த திகைப்பூட்டும் சம்பவம்', 'அண்டவெளி வீரருக்கு அம்புலியில் ஆபத்து', 'தண்மதியில் மண்ணவரின் தத்தளிப்பு', 'அணுவுக்குமஞ்சாத அம்புலி பிராணி'.

## இன்றைய போட்டி

பின்வரும் செய்திக்கு அழகான கவர்ச்சியான, கூடியவரை சுருக்கமான ஒருதலைப்பைஎழுதி அனுப்புங்கள்.

'புதையல் எடுத்துத் தருகிறேன் என்று கூறி தான் ஒரு மந்திரவாதி என்று கூறிக் கொள்ளும் ஆசாமி ஒருவர் சில தனவந்தர்களை ஏமாற்றிய செய்தி முல்லைத்தீவில் பெரிய பரபரப்பை உண்டு பண்ணியுள்ளது. நடுக்காட்டில் ஓரிடத்தில் புதையல் இருப்பதாக தாம்மை போட்டுப் பார்த்ததாகவும் அதை எடுப்பதற்கு சில பூசை கிருத்தியங்கள் செய்ய வேண்டுமென்றும்கூறி இந்த மந்திரவாதி அவர்களிடம் ஏராளமான பணத்தை வாங்கிக் கொண்டு ஒருநாள் இரவு எல்லோரையும் அழைத்துக் கொண்டு குறிப்பிட்ட இடத்துக்குப்போனார். அங்கே எல்லோருமாக நிலத்தை தோண்டினார்கள். சுமார் 10 அடி ஆழம் தோண்டியதும் மந்திரவாதி முன்னதாகவே இரகசியமாக புதைத்துவைத்த ஒரு பழைய இரும்புப் பெட்டி காணப்பட்டது. அதை உடைத்து திறப்பதற்குமுன் இன்னும் சில மந்திரவேலைகள் செய்ய வேண்டுமென்றும் அதற்கு இன்னும் பணம் தேவை என்றும் கூறி மந்திரவாதி அவர்களிடம் மீதியிருந்த பணத்தையும் வாரிச் சுருட்டிக் கொண்டு கம்பி நீட்டிவிட்டார். இரும்புப் பெட்டியை மிகவும் கஷ்டப்பட்டு உடைத்துப்பார்த்த போது அதற்குள் வெறும் பாறைக்கற்களேகணப்பட்டன!

### நிபந்தனைகள்

விடைகளைக் கீழ்க்காணும் கூப்பனிலேயே தெளிவாக எழுதி அனுப்பவேண்டும். விடைகள் யாவும் 7-5-69க்கு முன் எமக்கு வந்து சேரவேண்டும் ஒருவர் எத்தனை விடைகளையும் எழுதி ஒரே உறையில் வைத்து அனுப்பலாம். அனுப்பவேண்டிய விலாசம்:- **செய்தித் தலைப்புப் போட்டி (2)** 'ஈழநாடு', த. பெ. **இலக்கம் 49, யாழ்ப்பாணம்.** விடைகளை 'ஈழநாடு' காரியாலயத்தில் நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். எல்லா விஷயங்களிலும் போட்டிக் குழுவின் தீர்ப்பே முடிவானது. போட்டி சம்பந்தமான எவ்வித கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ள வேண்டாம். 'ஈழநாடு' ஊழியர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்து கொள்ள முடியாது. மிகச் சிறந்த விடைக்கு ரூபா ஐந்து (ரூ. 5/-) பரிசுப்பணமாக வழங்கப்படும்.

'ஈழநாடு'

**செய்திதலைப்புப் போட்டி-(2)**

விடை : ..............................

..............................

பெயர் : ..............................

விலாசம் : ..............................

..............................

தரிசனமளித்த புனிததினம்

அந்த நாளை அநேகமாகப் பலரும் மறந்துவிட்டோம். அந்த இயக்கத்தையும் சைவப்பிரமுகர்கள் கைவிட்டதால், பிறர் தலையிடவும் பலாத்காரம் புகவும் இடமேற்பட்டது. வருடாவருடம் அந்நாளைச் சிறப்பாக, அக்கோவில்களில் விசேஷ வழிபாட்டுடன், நன்றியுடன் கொண்டாடி, இந்த இயக்கம் மேலும் வெற்றிபெற இறைவன் அருளை நாடிநிற்க வேண்டும். அவன் அருளால் தானே கோவிலுக்குள் சென்று அவன் தாளை வணங்கி வழிபடமுடியும்?

0 0 0

தம்பியின் உரிமைகளை அண்ணன் மறுத்தால், தம்பி செல்ல ஹரிஜனங்களில் யாருக்கும் விருப்பமில்லை. தங்களுக்குஎப்படியும்விமோசனம் கிடைக்குமென்பது அவர்களது நம்பிக்கை

காலந்தாழ்த்தாமல் அதை நிறைவேற்றிவைக்க வேண்டிய கடமை சைவசமூகத்தைச் சேர்ந்ததாகும்.

0 0 0

பண்ணின் நேர் மொழியாள் உமை பங்கரோ,
மண்ணினார் வலஞ் செய்யும் மறைக் காடரோ,
கண்ணினா லுமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே.
— அப்பர் அடிகள்.

## இந்தித் திணிப்புக்கு லோகசபையில் எதிர்ப்பு

புதுடில்லி, மே 3

வெளிநாடுகளிலுள்ள இந்தியதூதரகங்களில் ஹிந்தியை அலுவல்மொழியாக ஆக்க முயற்சிக்கையில், தூதரகங்களிலுள்ள ஹிந்தி பேசாதஊழியர்களுக்குபாதகம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்காக வெளிவிவகாரமந்திரி திரு. தினேஷ் சிங் லோகசபையில் ஹிந்திபேசாத அங்கத்தவர்களுக்கு உறுதியளித்தார்.

திரு. எஸ். கந்தப்பன், டாக்டர் எம். சந்தோஷம் திரு. எச். என். முகர்ஜி ஆகியோர் இந்திய தூதரகங்களில் உள்ள ஹிந்தி பேசாத ஊழியர்களுகுஏற்படக்கூடிய சிரமங்கள்பற்றி குறிப்பிட்டனர்.

திரு தினேஷ்சிங், பீகார் காங்கிரஸ் அங்கத்தவர் திரு துவாரகநாத்திவாரிக்கு பதிலளிக்கையில் ஹிந்தியை திணிக்கும்பிரச்னை எழவில்லையென்றாலும், ஹிந்தி தானாகவே அலுவல் மொழியாக ஆகிவிடும் என்று கூறினார்.

ஒருகேள்விக்கு வெளிவிவகாரஇலாகா உதவி மந்திரி திரு. சுரேந்திரபால்க்சிங்அளித்த பதிலைத் தொடர்ந்து இந்தியதூதரகங்களில்ஹிந்தி மொழி உபயோகங் பற்றிய சர்ச்சை கிளம்பியது. இப்போது பெரும்பாலான தூதரகங்களில் சாதாரணகடிதப் போக்குவரத்துகளை ஹிந்தியில் நடத்துவது. சாத்தியமாக இருக்கிறது. ஆனால் ஹிந்தியில் சரளமாகவும், சரியாகவும் பேசக்கூடிய ஊழியர்கள்நிறையப்பேர்கிடைக்கும்வரை உத்தியோக பூர்வமான அலுவல்களை ஹிந்தியில் நடத்துவது சாத்தியமாயிருக்காது என்பதுதான் திரு சுரேந்திர பால்ஸிங் அளித்த பதிலாகும்.

திரு எஸ் கந்தப்பன் பேசுகையில், ஹிந்தியை விரும்பாதவர் ள்மீது அம்மொழியைத் திணிக்க முயற்சிப்பது ரொம்ப அதிர்ச்சியளிப்பதாக இருக்கிறது என்றுகூறினார். இந்திய தூதரகங்களிலுள்ள ஊழியர்களில்பெரும்பாலோர் ஹந்தி பேசாதவர்களாக இருந்தும், தூதரகங்களின் அன்றாட அலுவல்களை ஹந்தியில் நடத்த வேண்டுமென்று உத்தரவு பிறபபித்ததின் நோக்கம் என்ன? ஹந்திஒன்றுதான் இந்நாட்டின் மொழி என்றும், அதுதான் இந்நாட்டின்கலாச்சாரத்தை பிரதிபலிககிறது என்றும்காட்டுவதுதான் அரசாங்க நோக்கமா? இது தான் நோக்கமென்றால் பல மொழிகள் கொண்ட இந்நாட்டுக்கு இது நேர்மையானது அல்ல. [illegible]தை நாங்கள் அடியோடு எதிர்க்கிறோம்'' என்றும் அவர் கூறினார்.

இம்மாதிரி அர்த்தமற்ற திட்டங்களில் பணத்தைச் செலவிடுவதைவிட தூதரங்களின் திறமையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும் அவர் சொன்னார்.

### 12 புதிய மந்திரிகள்

ஹைதராபாத், மே 4

ஆந்திர மந்திரிசபை விரைவி[illegible] விஸ்தரிக்கப்படலாம். 10 அல்லது 12 பேர் புதிய மந்திரிகளாக நியமிக்கப்படலாம் எனத் தெரிகிறது. இதுகுறித்து ஆந்திர முதல்மந்திரி பிரமானந்த ரெட்டி, காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பா, பிரதமர் இந்திராகாந்தி ஆகியோருடன் விவாதித்ததாகக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org